# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 07 வியாழக்கிழமை (24-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:331


# அடுத்த சுற்றுப் பேச்சில் தமிழ்ச்செல்வன், கருணா

## நோர்வேக் குழுவை தலைவர் பிரபா நேற்றுச் சந்தித்தபோது தெரிவிப்பு

கிளிநொச்சி,ஒக்ரோபர்24

**தாய்லாந்தில் அடுத்த வியாழக்கிழமை நடைபெறும் இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு, அம்பாறை பிரதேச விசேட தளபதி கேணல் கருணா ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.**

**நேற்று நோர்வே அனுசரணையாளர் குழுவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையில் கிளிநொச்சியில் நடந்த பேச்சுக்களின்போது இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது.**

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் 9.30 மணி முதல் 12.00 மணி வரை இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் தரப்பில் வே. பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்குபற்றினர்.

நோர்வேத் தரப்பில் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்குப் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான கூட்டு செயலணியை ஸ்தாபிக்கும் விடயம் நேற்றைய பேச்சுக்களில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

கூட்டுச் செயலணியின் கூட்டமைப்பு செயற்பாடு - உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய விடயங்களைக் கையாள்வதற்கு அரசுப் படைத் தளபதிகளையும், புலிகளின் தளபதிகளையும் சேர்த்து (14ஆம் பக்கம் பார்க்க)



வன்னியில் நேற்று விடுதலைப் புலிகளின் தலைமையை சந்தித்து பேச்சு நடத்தச்சென்ற நோர்வே சமாதானக் குழுவின் தலைவர் விடர் ஹெல்கிஸனை தலைவர் பிரபாகரன் கைலாகு கொடுத்து வரவேற்ற காட்சி. *(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)*

## நோர்வே சமாதானக்குழு சந்திப்பை ஜனாதிபதி சந்திரிகா திடீரென ரத்து!

கொழும்பு,ஒக்.24

நோர்வே சமாதானக் குழுவினரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று சந்திக்கவில்லை. நேற்று இரவு சமாதானக் குழுவினருடன் நடைபெறவிருந்த சந்திப்பை ஜனாதிபதி திடீரென ரத்துச் செய்துவிட்டதே இதற்கான காரணமாகும்.

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்த நோர்வே சமாதானக் குழுவினர் நேற்றுப் பிற்பகல் கொழும்பு திரும்பி ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் நுகேகொடையில் நடைபெற்ற பொ.ஐ.மு. அரச எதிர்ப்புக் கூட்டம், மாலையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் ஆகியவற்றில் ஜனாதிபதி பங்குபற்ற வேண்டியிருந்ததாலேயே இச்சந்திப்பை அவர் ரத்து செய்தார் என்று ஜனாதிபதி செயலக ஊடகப் பேச்சாளர் ஜனதாச பீரிஸ் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை விஜயம் செய்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தலைமையிலான சமாதானக் குழுவினர் நாட்டின் தென்பகுதி - வடபகுதி அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்திருந்தனர். கொழும்பில் பிரதமர் ரணில், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் நோர்வேக் குழுவினர் சந்தித்திருந்தனர். (ம)

## கஞத்துறையில் கிரனேட் வீச்சு பொலீஸ் அதிகாரி பலியானார்!

கொழும்பு,ஒக்.24

கஞத்துறைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்றில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உறவினர் ஒருவரின் மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்காக புத்தளத்திலிருந்து சென்ற பொலீஸ் அதிகாரி ஒருவரே உயிரிழந்துள்ளதாக தொடங்கொட பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மற்றுமொரு பெண் காயமடைந்தார். தனிப்பட்ட பகைமையே இத்தாக்குதலுக்குக் காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை-

தீயிட்டுக் கொளுத்தப்பட்ட நிலையில் காணப்பட்ட பெண்ணின் சடலம் ஒன்றை மன்னார், பேசாலைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர். கொலை செய்யப்பட்ட இந்தப் பெண் ஒரு பிள்ளையின் தாய் ஆவார். (ம)

## மிதிவெடியில் சிக்கி சிறுவன் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.24

விளாம்பழம் பொறுக்குவதற்காக கைவிடப்பட்ட வளவொன்றினுள் சென்ற சிறுவன் ஒருவன் மிதிவெடியில் சிக்குண்டு உடல் முழுவதும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கரவெட்டி மத்திய பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த கிறிஸ்ரோபர் ஸ்ரனிஸ் (வயது-9) என்ற பாடசாலை மாணவனே இவ்வாறு படுகாயம் அடைந்தவராவான்.

பாடசாலை முடிந்து வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த மேற்படி சிறுவன் கரவெட்டி அரசடி வீதியொருள் (14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று சபையிலிருந்து வெளிநடப்பு

கொழும்பு,ஒக்.24

நாடாளுமன்றத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வெளிநடப்புச் செய்தனர். கூட்டமைப்பின் சார்பில் திருகோணமலை மாவட்ட எம்.பி. இரா.சம்பந்தன் சபையில் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாலேயே கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் சபையிலிருந்து வெளியேறினர்.

திருகோணமலையில் ஏழு இராணுவத்தினர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து (14ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது சுற்றுத் தாய்லாந்து சமாதானப் பேச்சு புதிய இடத்தில்!

### சொல்ஹெய்ம் இன்று தாய்லாந்து பயணம்

கிளிநொச்சி,ஒக்.24

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சு தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக் அருகில் உள்ள ஒரு நகரத்தில் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

முதல்சுற்றுப் பேச்சுக்கள் தலைநகர் பாங்கொக்குக்கு சுமார் 280 கிலோமீற்றர் தெற்கே கடற்கரை நகரான சட்டாஹிப்பில், அந்நாட்டு கடற்படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் நடைபெற்றது.

ஆனால், இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் அத்தகைய உயர் பாதுகாப்பு வலயத்தில் நடைபெறா எனத் தெரியவருகின்றது.

பாங்கொக்கிற்கு சுமார் ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ள (14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் மூன்றாவது தரப்பு முஸ்லிம்கள் என்பதை உறுதிசெய்க!

### ஹிஸ்புல்லாஹ் எம்.பி. வலியுறுத்து

தாய்லாந்தில் இடம்பெறப்போகும் இரண்டாம்கட்டப் பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாக முஸ்லிம் சமூகம் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் என்பது உறுதியளிக்கப்பட்டது. ஆனால், அது எந்தளவுக்கு வெற்றிகரமாக அமையப்போகிறது என்பதை அந்தச் சமூகம் பார்த்துக் கொண்டிருப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மறைந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மீனவர்கள் இரவிலும் கரைக்குத் திரும்ப அனுமதி!

### கஜேந்திரகுமார் எம்.பியின் முயற்சியால் பலன்


கொழும்பு,ஒக்.24

குடாநாட்டு மீனவர்கள் தமது கடற்றொழிலை முடித்துக் கொண்டு இரவிலும் கரைக்குத் திரும்புவதற்கு அனுமதிவழங்குமாறு சம்பந்தப்பட்ட கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு அரசு பணிப்புரை விடுத்திருக்கிறது.

வடபகுதிக் கடற்பரப்பில் மாலை நேர மீன்பிடிப்புக்குச் செல்வோர் இருட்டிய பின் கரைக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவதில்லை. விடிந்து, வெளிச்சம் பரவிய பின்னரே அவர்கள் கரைக்குத் திரும்பமுடியும் என்று படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

இதனால், தற்போது கடும் காற் (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





நோர்வே சமாதானக் குழுவினர் நேற்று வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நோர்வேக் குழுவினருக்கும் தலைவர் பிரபா தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழுவினருக்கும் இடையே பேச்சுக்கள் இடம் பெறுவதையும், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் தலைவருடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.



### தலை வெட்டி வீசிய வழக்கில்

# ஏற்கனவே தேடப்பட்டவராம் புளொட்டின் ஜெயா மாஸ்டர்

## இன்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.24

'மானுடத்தின் தமிழ்க்கூடல்' நிகழ்வின்போது பிஸ்டலுடன் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட புளொட் அமைப்பின் யாழ்.மாவட்ட உறுப்பினர் ஜெயச்சந்திரன்(ஜெயா மாஸ்டர்) ஏற்கனவே நீதிமன்றப் பிடியாணை விதிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

1999ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நெல்லியடிப் பகுதியில் இளைஞர் ஒருவர் கோரமாகக் கொல்லப்பட்டு அவரது துண்டிக்கப்பட்ட தலை யாழ். நகரப் பகுதியில் வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக இவர் தேடப்பட்டு வந்திருக்கிறார்.

தற்போது பொலீஸாரிடம் சிக்கியுள்ள ஜெயா மாஸ்டர், மேற்படி படுகொலை சம்பவம் தொடர்பாக இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

கரவெட்டி கன்பொல்லை வீதியைச் சேர்ந்த இராஜரத்தினம் இராஜேஸ்வரன் (வயது 23) என்ற இளைஞனே கரவெட்டிப் பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். துண்டிக்கப்பட்ட அவரது தலை மட்டும் அங்கிருந்து கடத்திவரப்பட்டு யாழ்நகரின் மையப் பகுதியில் வீசப்பட்டிருந்தது. எஞ்சிய முண்டப் பகுதி நெல்லியடியில் உள்ள புளொட் முகாமுக்கு அருகில் உள்ள வீடொன்றின் மலசலகூடக் குழிக்குள் அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் போட்டு மூடப்பட்டிருந்த சமயம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

"இந்தப் படுகொலைச் சம்பவத்துக்குச் சரியாக ஒருமாதத்துக்கு முன்னர் புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் யாழ்நகரில் ஆஸ்பத்திரி வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்தியில் வைத்துச் சுடப்பட்டிருந்தார்.

அவரைக் காட்டிக் கொடுத்தவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே மேற்படி கன்பொல்லை வீதியைச் சேர்ந்த இளைஞனைப் புளொட் குழுவினர் கடத்திச்சென்று கொலை செய்து, அவரது தலையை வெட்டி எடுத்து

(13ஆம் பக்கம் பார்க்க)

### 'மானுடத்தின் தமிழ்க் கூடலில்' பிடிபட்ட

# புளொட் உறுப்பினர் பிஸ்டல் வைத்திருக்க பாதுகாப்பு அமைச்சே அனுமதி தந்தது!

## யாழ்.பொலீஸார் நீதிமன்றில் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.24

கைதுசெய்யப்பட்ட புளொட் உறுப்பினர் வைத்திருந்த கைத்துப்பாக்கிக்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின்பேரில் பலாலியில் உள்ள படைத் தலைமையக அதிகாரியினால் 2001ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி வழங்கப்பட்டது. அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னரும் அந்த அனுமதி தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று யாழ்.நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்ச்சி நடைபெற்ற வீரசிங்கம் மண்டபத்தினுள் கைத்துப்பாக்கியுடன் அத்துமீறிப் பிரவேசிக்க முற்பட்டவேளை மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் கையளிக்கப்பட்ட புளொட் அமைப்பின் யாழ்.மாவட்ட உறுப்பினர் ஜெயச்சந்திரன் (ஜெயா மாஸ்ரர்) நேற்று மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்படி யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்படி விடயம் தொடர்பான விளக்க அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தார்.

அதன் பிரகாரம் 2001ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி பலாலி இராணுவத் தலைமையக அதிகாரியினால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் கைத்துப்பாக்கி வைத்திருப்பதற்கான அனுமதி குறிப்பிட்ட நபருக்கு வழங்கப்பட்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் அந்த அனுமதி நீடிக்கப்பட்டதாக பலாலி இராணுவத் தலைமையக அதிகாரியான மேஜர் ஜெயந்த செனிவிரட்ண மூலம் தான் உறுதிப்படுத்தியதுடன் பாதுகாப்பு தலைமையகமும் இதனை உறுதி செய்துள்ளதாகவும் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து பிரஸ்தாப புளொட் உறுப்பினரை அடுத்த மாதம் ஆறாம் திகதிவரை தொடர்ந்து நீதிமன்றின் பாதுகாப்பில் சிறைச்சாலையில் வைத்திருக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்கினராஜா யாழ்.சிறைச்சாலைப் பதில் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார். (ஜ-10)

### நெடுந்தீவிலிருந்து

# பொலீஸ் நிலையத்தை உடனடியாக அகற்றுக

## கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.24

நெடுந்தீவிலிருந்து பொலீஸ் நிலையத்தை உடனடியாக அகற்றுமாறு கோரி நெடுந்தீவு பொதுமக்கள் ஒன்றியம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இதுகுறித்து கண்காணிப்புக் குழுவின் இலங்கைக்கான பிரதிநிதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது பகுதியில் தற்சமயம் பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டிருப்பது எம்மைப் பெரிதும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது.

2000ஆம் ஆண்டு எம் பகுதியில் சிவில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளவென வந்த ஸ்ரீலங்கா பொலீஸார் எமது தீவுக்கென இருந்த தனித்துவமான பண்பாட்டு கலாசார சமூகப பெறுமானங்களை சிதைவுபடுத்தியது மட்டுமல்லாமல், எம் தீவின் பொருளாதாரத்தையும் சூறையாடினர். இது பற்றி அவ்வப்போது முறைப்பாடு செய்ததன் மூலம் இங்கிருந்து பொலீஸார் வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் மீளவும் சிவில் நிர்வாகப்பணி என்ற போர்வையில் எமது தீவில் பொலீஸ் பிரிவினர் வந்திருப்பது எம்மை மிகவும் விசனத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

உடனடியாக இங்கிருந்து பொலீஸ் பிரிவினரை வெளியேற்ற உடன் விரைந்து ஆவன செய்யுமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

எமதுதீவு யாழ். குடாநாட்டிலிருந்து நண்டதொலைவில் உள்ளது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. வெளித்தொடர்புகளை உடனுக்குடன் பெறக்கூடிய சூழல் இல்லை. இங்கு பொலீஸாரும், இராணுவமும் முகாமிட்டிருப்பதால் எமது மக்கள் எந்நேரமும் பயத்துடனும், நிம்மதியின்றியும் வாழவேண்டிய நிலைமைதான உள்ளது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நல்லெண்ண புறச்சூழல் ஒன்று எமது தீவில் ஏற்பட்டுள்ள நிலையில் பொலீஸ் பிரிவு எமக்குத் தேவையில்லை என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி இந்த மகஜரை அனுப்பி வைக்கின்றோம் - என்று அதில் உள்ளது.

மேற்படி மகஜரின் பிரதிகள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், யாழ். அரசாங்க அதிபர், பொலீஸ்மா அதிபர், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ)

## இரத்ததானம் வழங்குமாறு அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்.ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் சகல வகையான இரத்தத்துக்கும் திடீரென தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் -

இரத்ததானம் செய்ய விரும்புவோர் உடனடியாக ஆஸ்பத்திரி இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு இரத்த தானம் வழங்கமுடியும் என்றும் இரத்த வங்கி வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (எ)

## மத்தி.மாணவர்கள் பகிஷ்கரிப்பு தொடருகிறது

தமது கற்றல் செயற்பாடுகளுக்குக் கணனி வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ். மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள் நடத்திவரும் வகுப்பு பகிஷ்கரிப்பு நேற்று இரண்டாவது நாளாகவும் நடத்தப்பட்டது.

கல்லூரியின் முன்பாக விளையாட்டு மைதானத்தில் ஒன்று திரண்டிருந்த மாணவர்கள் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு காலை9 மணிதொடக்கம் நண்பகல் 12மணி வரை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். (முன் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்) (எ-51)

# வாஷிங்ரன் நகரக் கொலையாளி சிறுவர்களின் உயிர்களுக்கு இலக்கு!

## அமெரிக்கப் பொலீஸார் எச்சரிக்கை

வாஷிங்ரன்,ஒக்.24

அமெரிக்காவில் பெரும் பீதியை பரப்பியுள்ள குறிபார்த்துச் சுடும் கொலையாளி இனி சிறுவர்களை இலக்கு வைக்கப் போவதாக வாஷிங்ரன் பொலீஸார் எச்சரித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக தலைநகர் வாஷிங்ரனிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மறைந்திருந்து குறிபார்த்துச் சுடுவதன் மூலம் 9 பேரைக் கொன்றும், மேலும் சிலரைக் காயப்படுத்தியும் பொலீஸாருக்கு சவாலாகவும், பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ள கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியாது வாஷிங்ரன் பொலீஸார் திணறுகின்றனர்.

இந்த நிலையில், அந்தக் கொலையாளி சில நிபந்தனைகளுடன் தம்மைத் தொடர்பு கொண்டதாகவும் -

அத்துடன், கடந்த சனிக்கிழமை அக்கொலையாளி தாக்குதல் நடத்திய இடத்தில் செய்தி ஒன்றையும் விட்டுச் சென்றுள்ளதாகவும் - பொலீஸார் நேற்றுத் தெரிவித்தனர். கொலையாளியின் செய்தியை பொலீஸ்துறைத் தலைவர் சார்ள்ஸ் மூஸ் நேற்று செய்தியாளர்களிடம் படித்துக் காட்டினார்.

உங்கள் குழந்தைகளுக்கு எங்கும் எந்த நேரத்திலும் பாதுகாப்புக் கிடையாது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. கொலையாளி பெரும் தொகைப் பணம் கோரியிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால், இதனை உறுதிப்படுத்த மறுத்தவிட்ட அதிகாரி சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுடன் கொலையாளி தொடர்பு கொண்டதாகத் தெரிவித்தார்.

இதேசமயம், கொலையாளிக்கு சில தகவல்களை ஊடகங்கள் மூலம பொலீஸார் தெரிவித்துள்ளனர். நீங்கள் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறோம். ஆயினும், நீங்கள் கேட்டுக்கொண்ட விடயம் தொழில்நுட்ப ரீதியாகச் சாத்தியமற்றது. எவ்வாறாயினும் நீங்கள் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்தத் தயாராக உள்ளோம் இவ்வாறு கொலையாளிக்கான செய்தியில் பொலீஸார் தெரிவித்துள்ளார்.

இது ஒரு புறமிருக்க, கொலையாளியின் எச்சரிக்கை காரணமாக தமது பிள்ளைகளை பாடசாலை உட்பட வெளியிடங்களுக்கு அனுப்புவதை வாஷிங்ரன் நகரப் பெற்றோர் தவிர்ப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ)



குறிபார்த்துச் சுடும் கொலையாளியைத் தேடி வீதிச் சோதனையில் அமெரிக்கப் பொலீஸார் ஈடுபட்டுள்ள காட்சி.



வடஇஸ்ரேலின் பர்தேஸ்ஹன்னா நகரில் கடந்த திங்கட்கிழமை பயணிகள் பஸ் மீது வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட காரை பலஸ்தீனத் தீவிரவாதி ஒருவர் செலுத்திச் சென்று மோதி தற்கொலைத் தாக்குதல் நடத்தினார். இதில் தீவிரவாதி உட்பட 15 பேர் உயிரிழந்தனர். தாக்குதலுக்குள்ளான பஸ் பற்றி எரிவதையும், காயப்பட்ட ஒருவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுவதையும் படத்தில் காணலாம்.

# பின்லேடனுக்கு சிகிச்சையளித்த பாகிஸ்தானிய மருத்துவர் கைது!

இஸ்லாமாபாத்,ஒக்.24

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடனுக்கு சிகிச்சை அளித்ததாகக் கூறப்படும் மருத்துவரை பாகிஸதான் பொலீஸாரும் அமெரிக்கப் பொலீஸாரும் லாகூரில் கைது செய்தனர்.

விசாரணைக்கு அவர் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்று தெரிகிறது.

'அந்திரெக்ஸ்' எனப்படும் விஷக் கிருமியைத் தயாரிக்கும் முறையை தலிபான் மற்றும் அல்கெய்டா அமைபினருக்கு இவர் சொல்லிக் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

அமிர் அஜிஸ் என்ற அந்த மருததுவர் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர். லாகூரில் குர்கி என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வருகிறார். அந்த மருத்துவமனையில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி செய்தபோது, அந்நாட்டுக்கு அவர் அடிக்கடி சென்று வந்துள்ளார். அப்போது பின்லேடனுக்கு இவர் சிகிச்சை அளித்ததாகவும் நம்பப்படுகிறது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக ஆப்கானிஸ்தானியர்கள் போரிட்டபோது, ஆப்கன் முஜாஹித்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர் அமிர் அஜிஸ்.

லாகூரில் இலவச மருத்துவமனைகளை இவர் நடத்தி வருகிறார். நவாஸ் ஷெரீப் ஆட்சியில் இருந்த போது லாகூர் மாகாண அரசுக்கு மருத்துவத் துறை ஆலோசகராகவும் இருந்தவர் இவர். (ஒ)

உலக அரங்கில்

## கியூபா தளத்தில் உள்ள கைதிகளை விடுவிக்க அமெரிக்கா திட்டம்

வாஷிங்ரன்,ஒக்.24

கியூபாவில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளமான குவான்டனாமோ தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தலிபான் மற்றும் அல்கெய்டா கைதிகளில் சிலரை விடுவிக்கப் போவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்டதிலிருந்து சுமார் 600 கைதிகள் எவ்வித விசாரணையும் இன்றி இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# கிறிஸ்துவின் சகோதரருடைய கல்லறைப்பெட்டி கண்டுபிடிப்பு!

வாஷிங்ரன்,ஒக்.24

இயேசு கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபின் எலும்புகள் வைக்கப்பட்டு இருந்த பெட்டி இஸ்ரேல் நாட்டில் இப்போது கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தார் என்பதற்கு பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டுதான் ஆங்கில ஆண்டு கணக்கிடப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு இன்னொரு சான்றாக அவரது தம்பியின் கல்லறைப் பெட்டி இஸ்ரேல் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

கிறிஸ்துவுக்கு தா, யாக்கோபு, யோவான் ஆகிய சகோதரர்களும், சகோதரிகளும் உண்டு என்று கிறிஸ்தவர்களின் புனித நூலான வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. அதில் யாக்கோபின் எலும்புகள் வைக்கப்பட்டு இருந்த பெட்டிதான் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது.

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் இறந்தவர்களின் உடல்களை குகைகளில் வைத்து பெரிய பாறாங்கல்லால் அதை மூடி விடுவார்கள். அப்படித்தான் கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபின் உடலும் அடக்கம் செய்யப்பட்டு இருக்கும். பின்னர் நீண்ட காலம் கழித்து அந்தக் கல்லறையைத் திறந்து எலும்புகளை பெட்டியில் சேகரித்து வைப்பார்கள். அந்தப் பெட்டியில் இறந்தவர்களின் பெயரும் பொறிக்கப்பட்டு இருக்கும்.

கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபின் பெயர், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெட்டியில் 'அராமைக்' மொழியில் எழுதப்பட்டு உள்ளது. பெயருடன் யோசேப்பின் மகன், இயேசுவின் சகோதரர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெட்டி சுண்ணாம்புக் கல்லால் செய்யப்பட்டு இருந்தது. இது கி.பி. 63 ஆம் ஆண்டில் செய்யப்பட்டு இருக்கக் கூடும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். (ஒ)

# அஸர்பைஜான் கடற்பகுதியில் பயணிகள் கப்பல் மூழ்கியது!

பக்கூ,ஒக்.24

கஜகஸ்தானில் இருந்து அஸர்பைஜானுக்குச் சென்று கொண்டிருந்த பயணிகள் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியதில் அதில் பயணஞ்செய்த 51 பயணிகளும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸர்பைஜான் தலைநகர் பக்கூவில் இருந்து 80 கிலோமீற்றர் தூரத்தில் இந்தப் படகு விபத்துக்குள்ளானதாக ரஷ்ய செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

மெர்குரி - 2 என்ற அந்தக் கப்பல் கடலில் மூழ்குவதற்கு முன்னர் அதன் கப்டன் ஆபத்துச் சமிஞ்சைகளை வெளியிட்டதாகவும், ஆனால், கப்பலுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு அதன் றேடியோத் தொடர்புகள் இயங்கவில்லை என்றும் கூறப்பட்டது. மோசமான காலநிலை காரணமாகவே கப்பல் மூழ்கி இருக்கலாம் என்று கப்பலின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கப்பல் மூழ்கிய இடம் எதுவென சரியாகத் தெரியாததன் காரணத்தால மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் படகையும் அதிலிருந்தவர்களையும் தேடுவதற்கு 5 கப்பல்களும் 5ஹெலிகளும் அந்தப் பகுதிக்கு விரைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# அதிபரைத் தெரிவுசெய்வதில் ஈக்குவடோரில் இழுபறி

குயிட்டோ,ஒக்.24

மத்திய அமெரிக்காவில் உள்ள சிறிய நாடான ஈகுவடோரில் அண்மையில் அதிபர் பதவிக்கான தேர்தல் நடந்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் மிக நெருக்கமானவையாக வெளியாகியுள்ளமையால் புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இந்தத் தேர்தலில் மூன்று பேர் போட்டியிட்டனர். இதில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான லூசியோ கியூடியர்ஸ் 18.79 சதவீத வாக்குகளைப் பெற்றார். நாட்டின் பெரும் பணக்காரரும் வாழைப்பழ ஏற்றுமதியாளருமான அல்வாரோ நோபாவா 17.55 சதவீத வாக்குகளைப் பெற்றார். சோசலிஸக் கட்சியைச் சேர்ந்த லியோன் ரோல்டஸ் 15 சதவீத வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தில் இருக்கின்றார்.

நாட்டின் அரசமைப்புப்படி அதிபர் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால் குறைந்தபட்சம் 50 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கவேண்டும் ஆனால், எவரும் இந்த அளவுக்கு வாக்குகளைப் பெற்றிருக்காத காரணத்தால் புதிய அதிபரைத் தேர்ந்தெடுக்க இரண்டாவது முறை வாக்குகள் எண்ணப்படவுள்ளன. தற்போது முதலிடத்தில் இருக்கும் இரு வேட்பாளர்களும் பெற்ற வாக்குகளை மட்டும் எண்ணி அவற்றின் அடிப்படையில் புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்படுவார். (ம)

# ஈராக் அதிபரைக் கொல்வது எளிதா?

பக்தாத்,ஒக்.24

ஈராக் மீது போர் தொடுக்க அமெரிக்கா எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறது. இது மட்டுமன்றி, ஈராக் அதிபர் சதாம்ஹுஸைனைக் கொல்ல முனவந்தால் உதவிகளைத் தருவதாகவும், உதவிகளைப் பெறாமலேயே கொன்றுவிட்டு வந்தால் தக்க சன்மானம் தருவதாகவும் அமெரிக்க அரசு அறிவித்திருக்கிறது.

வல்லரசான அமெரிக்காவின் எதிர்ப்பையும் வெறுப்பையும் இந்த அளவுக்கு சம்பாதித்து வைத்திருக்கும் சதாம் ஹுஸைன் தன்னைக் கொல்ல முயற்சிகள் நடந்து கொண்டே இருப்பதை அறிந்து, அவற்றிலிருந்து தப்பிக்க சில தற்காப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துப்பாக்கிச் குண்டுகளால் துளைக்க முடியாத மெல்லிய கவச உடையை அணிந்து அதன் மீது ராணுவச் சீருடையை அவர் அணிந்



திருக்கிறார். தொலைவிலிருந்து சுடுகிறவர் தலையைக் குறிவைக்கக் கூடும் என்பதால் தலையில் அணியும் தொப்பியைக் கூடக் குண்டுதுளைக்க முடியாத உலோகத்தைப் பயன்படுத்தி தயாரித்துள்ளார்.

தனது மாளிகைகளுக்குள் பாதாள நிலவறைகளையும், சுரங்கப் பாதைகளையும் வெட்டி வைத்திருக்கிறார். எந்த அறையில் படுத்திருக்கிறார் என்று எளிதில் கண்டுபிடித்துவிட முடியாதபடி போக்குக் காட்ட சில ஏற்பாடுகளையும் தனது மாளிகையில் அவர் செய்திருக்கிறார்.

சாப்பாட்டில் விஷம் வைத்துவிடக் கூடும் என்பதற்காக, எதையெல்லாம் சாப்பிடுவாரோ அதையெல்லாம் நாலைந்து பேருக்கு முதலில் அளித்து சாப்பிடச் சொல்லிவிட்டுப் பிறகே சாப்பிடுகிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னைப்போலவே ஏழு அல்லது எட்டுப் பேரை சதாம் உருவாக்கி வைத்திருக்கிறார்.

தோற்றத்திலும் நடை, உடை, பாவனைகளிலும் அவரைப்போலவே இருக்கும் இந்த நகல் ஆள்கள் அவர் செல்ல வேண்டிய திறப்பு விழாக்களுக்கும் விருந்துகளுக்கும் சென்று அவரைப் போலவே நடித்து விட்டு வந்து விடுகிறார்கள். அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் ராணுவத்தைச் சேர்ந்தவர்களும் கூட வந்தது நிஜ சதாமா, போலியா என்று தெரியாமல் அவரே வந்ததாக நினைத்துவிடுகிறார்கள்.

நிலைமை இப்படி இருக்க, சதாமை எங்கே அடையாளம் காணுவார்கள், எப்படிக் கொல்வார்கள் என்று தெரியவில்லை. சதாமைக் கொல்ல வேண்டும், முடியாவிட்டால் ஈராக்கையே துவசம் செய்துவிட வேண்டும் என்ற முடிவோடு பயங்கரவாதத்துக்கு எதிரான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது அமெரிக்கா.

# இரு வெடிவிபத்துக்களில் இந்தியாவில் 23 பேர் பலி!

இந்தியாவின் தென்மாநிலங்களில் இடம்பெற்ற இரு வெவ்வேறு வெடிவிபத்துக்களில் 23 பேர் உயிரிழந்தனர்.

ஆந்திர மாநிலத்தின் ஹைதராபாத் பேகம் பஜாரிலுள்ள கட்டடம் ஒன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெடிவிபத்தில் ஒரு பெண் உட்பட 13 பேர் உயிரிழந்தனர், 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். விபத்து இடம்பெற்ற அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்று இயங்கி வந்ததாகவும் -

மேல்மாடியில் தங்கும் விடுதி இருந்ததாகவும் -

மின் ஒழுக்கு காரணமாக நேற்றுக் காலை பட்டாசுத் தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த வெடிபொருள்கள் தீப்பிடித்து வெடித்துச் சிதறியதில் மாடிப்பகுதி இடிந்து வீழ்ந்து, விடுதியில் தங்கியிருந்த 13 பேர் உயிரிழந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெடிவிபத்தில் 10 பேர் கொல்லப்பட்டனர். இந்த விபத்தும் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Panasonic NV-SJ200 டெக் (Deck) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.செந்தூரன், 72/29, பணிக்கர்வளவு, திருநெல்வேலி. T.PNo.0777110093 (9809)

பூச்சி நீக்கிய 9மாத அல்சேசன் பெண் நாய் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்க. S.சதீஷ், ஹேமா இல்லம், நவாலி வடக்கு, மானிப்பாய். (9824)

## ஜோதிடம்

உங்கள் ஜாதக பலன்களை அறிந்திடவும், திருமணப் பொருத்தம், எண் கணித பலன்கள் அறிந்திடவும் உடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் திருமண சேவையும் செய்யப்படும். தொடர்பு: N.கந்தையா, மூத்த விநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை. (9478)

## தவறிவிட்டது

சங்குவேலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த ம.பார்த்தீபன் (யூட்டன்) என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம் மானிப்பாய்க்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். (9816)

பரமானந்தராஜா பார்த்தீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.772291264V),யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.1, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஸ்கை றோஸ் ஒலிப்பதிவுக் கூடத்தில் ஒப்படைக்கவும். (9805)

நாவலடி, அரியாலையைச் சேர்ந்த செல்வரெட்ணம் ஜெகதீஸ்வரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.802171021V), விசேட அடையாள அட்டை (0902005823), சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பச்சிட்டை என்பன 20.10.2002 ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலிச் சந்திக்கும் சட்டநாதர் சிவன்கோயிலடிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஜெயா மிக்சர், 295, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (9796)

சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த இராமசாமி கமலேஸ்வரியின் தேசிய அடையாள அட்டையும் (இல.527853354X), விசேட அடையாள அட்டையும் (இல. 0905019000) செல்வச்சந்நிதியில் 23.08.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (9826)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Bairaha, Broiler குஞ்சுகள் 27.10.2002 மாலை 5 மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867. (9818)

## கல்வியியற் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் இரண்டாம் கட்டக் கட்டுமானப் பணிகள் 20கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்லூரியின் முதற்கட்டப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளதாகவும் -

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் புதிய கட்டத்தில் கல்லூரி செயற்படவுள்ளதாகவும் -

கல்லூரிப் பீடாதிபதி கமலநாதன் தெரிவித்தார். (ஒ-180)

## 'சுதந்திர வேட்கை' அறிமுகவிழா

வவுனியா,ஒக்.24

அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' நூலின் அறிமுக விழா நாளை வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த விழாவில் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார். (ஒ-3)

# சேவைநலன் பாராட்டு



## உயர்திரு.து.செல்வராசா

(S.L.P.S.I)

எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு.து.செல்வராசா அவர்கள் 28 வருடங்கள் ஆசிரியராகவும் 11 வருடங்கள் அதிபராகவும் அளப்பெருஞ் சேவைகளாற்றி எல்லோர் மத்தியிலும் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர். அத்தகைய ஆசானின் சேவையை நாமும் பாராட்டுவதுடன், அவர் நோயற்ற வாழ்வையும் நீண்ட ஆயுளையும் பெற எல்லாம்வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா.அ.சங்கம், நலன்விரும்பிகள்.

யா/நுணாவில் கிழக்கு
அமிர்தாம்பிகை வித்தி., சாவகச்சேரி.

(9819)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரம்மஸ்ரீ

## ச.உமாபதிசர்மா(B.A.)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி(B.A.) பட்டம் பெற்றதையொட்டி சித்தன்கேணி

பிரம்மஸ்ரீ ஞான.சபாரட்ணசர்மா

அவர்களின் கனிஷ்ட புத்திரன்

## பிரம்மஸ்ரீ உமாபதி சர்மா(B.A.)


அவர்கள் எதிர்காலத்திலும் கல்வியில் மேலும் உயர்நிலை அடைந்து பட்டங்கள் பல பெற்று சிறப்புடன் வாழவேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

பிரம்மஸ்ரீ நா.சோமஸ்கந்தக் குருக்கள்
குடும்பத்தினர் ஆஸ்திரேலியா.

பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்
சுன்னாகம்.

(C/24383)


முதன் முறையாக

License No : 50045

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

BS No : 5412:1998
License No : KM 4240

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324201-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


# இதய அஞ்சலி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் கலந்த வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான தர்மகர்த்தா சைவப்பெரியார், சிவநெறிச் செல்வர்

## வைத்திலிங்கம் செட்டியார் கந்தப்பச் செட்டியார்

அவர்களின் ஆன்மா இறையருள்பெற்று சிவனடி சேர எமது இதய அஞ்சலிகள்.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்,
கோப்பாய்.

(9825)


# ஜே.கே. அரங்கள்



இன்ஜினியர்கள் பாவிக்கின்ற, பெறுமதிக்கு பொருத்தமான ஜே.கே. அரங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

ஜெனரல் எக்கியூப்மன்ட்ஸ் லிமிடெட்

316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 12.

போன்: 345046, 327264, 343822, 430799

பக்ஸ் : 434637

(சி-24331)

TALENT ads


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் அணைப்பில
24 - 06 - 1924



ஆண்டவன் அணைப்பில
24 - 09 - 2002

அமரர்

## பொன்னம்பலம் துரைசிங்கம்

(முன்னாள் கிளை முகாமையாளர், சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)

நீங்கள் எங்களுடன் இருந்தபோது நிமிர்ந்து நின்றோம்
உங்களை இழந்தபோது கலங்கி நின்றோம்
காற்றினிலே கலந்த உங்கள் உயிர்மூச்சு
இன்னும் எங்கள் நெஞ்சினிலே வீற்றிருந்து வீசுகிறது!

இன்று (24.10.2002) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் பகல் 10 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் இனிய நினைவுகளை நெஞ்சங்களில் சுமந்து நிற்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மட்டுவில் மத்தி,
சிவன் கோயிலடி,
சாவகச்சேரி.

(9815)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## கந்தையா இரத்தினம்

அன்போடு பேசி ஆதரவாய் அரவணைத்து
பண்போடு எமை வளர்த்த பண்பாளரே!
இன்று உம்மைப் பிரிந்து தவிக்கின்றோம்
என்று காண்போம் உம் திருமுகத்தை?
அன்னாருக்கு எமது கண்ணீர்
அஞ்சலியைக் காணிக்கையாகச்
சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

- உறவினர்கள்.

பருத்தியோலை, மயிலணி, சுன்னாகம். (9823)

# மரண அறிவித்தல்

## கந்தையா இரத்தினம்

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், செட்டியார் & கம்பனி, கிராண்ட்பாஸ்)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பருத்தியோலை, மயிலணி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் 20.10.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று அறியத் தருகின்றோம்.

தகவல்.
இ.அன்னலட்சுமி
(மனைவி)

பருத்தியோலை,
மயிலணி,
சுன்னாகம்.

(9822)

உதயன்

## தலைமையும் தகைமையும்

"உலகெங்கும் வாழுகின்ற எட்டுக் கோடித் தமிழர்களுக்கும் தலைமை தாங்குகின்ற தகுதியும் வலிமையும் ஈழத் தமிழர்களுக்கே - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே - உண்டு. எனவே, நீங்கள் யாரையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. யாருடைய தயவுக்காகவும் காத்திருக்க வேண்டியதுமில்லை."

- இவ்வாறு அடித்துக் கூறியிருக்கின்றார் தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான திருமாவளவன்.

யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நிறைவெய்திய 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்வில் பங்குபற்றி, ஈழத் தமிழர்களோடு சங்கமித்து, புளகாங்கிதமுற்ற நிலையில், அந்த நிகழ்வின் நிறைவு நாள் உரையில் இவ்வாறு அவர் தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

உலகெங்கும் வாழுகின்ற தமிழர்களுக்குத் தலைமை தாங்குவதற்கான பெருமையை ஈழத் தமிழர்களுக்கு வழங்குவதற்குரிய காரணங்களாக இரண்டு விடயங்களை அவர் முன்வைக்கின்றார்.

ஒன்று தகுதி; மற்றையது வலிமை.

ஓரினத்துக்குத் தலைமை வகிப்பதற்கு இந்த இரண்டு தகைமைகளும் அவசியமானவை. இவற்றில் ஒன்றில்லாவிட்டாலும் தலைமைப் பண்பைக் கோட்டை விட வேண்டியதுதான்.

"ஒரு கதாநாயகனுடைய திரைப்படம் வரவில்லை என்றால் தன் உடலில் சிவகாசிப் பட்டாசைச் சுற்றிக்கொண்டு மடிந்து போகும் அளவுக்கு சினிமா மோகத்தில் மூழ்கிக் கிடக்கின்றது தமிழகம். ஆனால், இன விடுதலைக்காக உயிர் கொல்லும் சயனைட்டை சர்க்கரையாக மெல்லுகின்ற தியாகமும் வீரமும் மிக்க போராளிகளைக் கொண்டிருப்பதால் விஞ்சி நிற்கின்றது ஈழம்" - இப்படி ஒப்பிட்டு வர்ணிக்கின்றார் விடுதலைச் சிறுத்தை திருமாவளவன்.

இந்த உதாரணம் ஒன்றே ஈழத் தமிழரின் தகைமையையும் வலிமையையும் வெளிப்படுத்தப் போதுமானது.

சிங்களப் பேரினவாதத்தையும் எதிர்த்துக் கொண்டு, உலகின் நான்காவது இராணுவம் என்று சொல்லப்படுகின்ற தெற்காசிய வல்லரசான இந்தியப் பேரரசின் மிகப் பெரிய படைகளை எதிர்கொண்டு, புறமுதுகிட்டு ஓடச் செய்த வல்லமை வாய்ந்த மக்கள் போராட்டம் ஈழ மண்ணில் நடந்திருக்கின்றது என்றும் திருமாவளவன் சுட்டிக் காட்டுகின்றார்.

இராணுவத் தளத்திலே ஈழத் தமிழன் இன்று உலகத் தரத்துக்கே உயர்ந்துவிட்டான். இராணுவ ரீதியில் இன்று அவர்கள் கையாளுகின்ற யுக்திகள், தந்திரோபாயங்கள் வளரும் நாடுகளுக்கே வழிகாட்டிகளாக இருக்கும் அளவுக்கு - மூன்றாம் உலக நாடுகளுக்கே அவர்கள் தலைமை தாங்கக்கூடிய அளவுக்கு - இராணுவ ரீதியில் அவர்களின் ஆளுமையை உயர்த்தியுள்ளது என்றும் திருமாவளவன் ஈழத் தமிழருக்கு கிரீடம் சூட்டுகின்றார்.

இந்தத் தகுதியும் வலிமையும் ஈழத் தமிழருக்கு எவ்வாறு வந்தது என்று வினாவெழுப்பும் அவர், அதற்கு விடையும் பகர்கின்றார்.

தமிழ் இனத்தின் வரலாற்றிலே, தமிழ்த் தேசிய இனத்துக்காகத் தோன்றி - வளர்ந்து - தமிழர்களின் தன்மானத்தைப் பாதுகாப்பதற்காக இராணுவப் பலத்துடன் வீறுகொண்டு ஒரு தலைவன் எழுந்திருக்கின்றான். அவன் வேறுயாருமல்ல தலைவன் பிரபாகரன்தான். அவனே இத் தகுதியும் வலிமையும் ஈழத் தமிழருக்குக் கிட்டுவதற்கு வழிகாட்டி என்று இயம்புகின்றார் திருமாவளவன்.

புறநானூற்றுத் தமிழரின் வீரம், பிரதேசம் பிடிக்கும் ஆவல் கொண்டது. ஆனால், நவீன புறநானூற்றைப் படைக்கும் ஈழத் தமிழரின் மெய்த்திறனோ, தமிழனை - தமிழ்த்தேசத்தை - தமிழ்த் தேசியத்தை - மீட்கும் வீரஞ்செறிந்த தியாகப் போராட்டமாக மிளிர்கின்றது.

சரியான தலைவரின் வழிகாட்டலில் அது முன்னோக்கி நகர்வதால் அதன் இலக்கை அது அடைவது திண்ணம். திருமாவளவனின் 'உறுதி கலந்த - நம்பிக்கை மிகுந்த - உணர்வைத் தூண்டுகின்ற - இந்த உரை அதைத்தான் மீண்டும் ஒரு தடவை வலியுறுத்திக் கூறுகின்றது.

# பேச்சுக் குறித்து கருத்துக்கணிப்பு பத்து மாவட்டங்களில் நடக்கும்!

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக மக்கள் கருத்துக் கணிப்பை நடத்துவதற்கு அரசு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது சுற்றுப் பேச்சுக்கள் தொடர்பாக அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இம்மாதம் 31ஆம் திகதி இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கணிப்பு இடம்பெறவுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட பத்து மாவட்டங்களில் கருத்துக் கணிப்பு நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, காலி, குருநாகல், அனுராதபுரம், மொனராகல, மட்டக்களப்பு, வவுனியா, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் சுமார் 5ஆயிரம் பேர் இந்தக் கருத்துக் கணிப்புக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

நூறு பல்கலைக்கழக மாணவர்கள் இந்தக் கருத்துக் கணிப்பில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

## வன்னிப் பெருநிலப்பரப்பில் 'பாடலும் தேடலும்' போட்டி

கிளிநொச்சி,ஒக்.24

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலை மாணவர்களின் கிரகித்தல் ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் 'பாடலும் தேடலும்' என்ற போட்டி நிகழ்ச்சி ஒன்றை 'புலிகளின் குரல்' வானொலி தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் கோட்ட ரீதியாக நடத்திவருகின்றது.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்தத் தொடர் போட்டி முதலாவது நிகழ்வு பூநகரிக் கோட்டத்தில் உள்ள பூநகரி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தமிழீழ மாணவர் அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பூநகரி மகா வித்தியாலய அதிபர் மொறயஸ், 'புலிகளின் குரல்' இசை அமைப்பாளர் செயல்வீரன் ஆகியோர் ஈகச் சுடரேற்றினர். தமிழீழ மாணவர் அமைப்பின் அரசியல் பொறுப்பாளர் இராணிமைந்தன் தேசியக்கொடியை ஏற்றினார்.

தமிழீழப் பாடகர் எஸ்.ஜி.சாந்தன் எழுச்சிப் பாடல்களை பாடியதைத் தொடர்ந்து அந்தப் பாடல்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு போட்டி ஆரம்பமானது. பதினைந்து பாடசாலைகளைச் சேர்ந்த 60 மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றினர்.

இந்தப் போட்டியில் மேற்பிரிவில் பூநகரி மகா வித்தியாலயம், வேரவில் இந்து கலவன் பாடசாலை ஆகியவையும்-

கீழ்ப் பிரிவில் கறுக்காய்த் தீவு அ.த.க. பாடசாலை, பூநகரி மகா வித்தியாலயம் ஆகியனவும் - வெற்றி பெற்றன.

இந்தப் போட்டி தொடர்ந்து ஏனைய கோட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றது. (ஒ-3)

## காரைநகரில் படையினர் பனை தறிக்கவில்லையாம்

### அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.24

காரைநகர், தோப்புக்காடு மடத்து வளவுப் பகுதியில் பனை மரங்களை கடற்படையினர் தறிக்கவில்லை என்று வடபிராந்திய கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் பனை மரங்களைக் கடற்படையினர் தறிப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர் என்று கடந்த 19 ஆம் திகதி உதயனில் வெளிவந்த செய்தி தொடர்பாகவே அவர் இப்படிக் கூறினார்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் பனை மரங்களைக் கடற்படையினர் தறிப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. கடற்படையைச் சேர்ந்த எவரும் பனை மரங்களைத் தறிக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-3)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

## கொடுப்பனவு நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து போராட முஸ்தீபு

தென்மராட்சி,ஒக்.24

தென்மராட்சி பிரதேசத்தில் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவது நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து அப்பிரதேசத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் தமது கடமை வேளையை பகிஷ்கரித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட முஸ்தீபு மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

வலிகாமம் பகுதிகளிலும் தென்மராட்சி பிரதேசத்தின் கைதடிப் பகுதியிலும் மீளக் குடியமர்ந்த 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்ட போதிலும் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 'உ' பங்கீட்டு அட்டை வைத்துள்ளோருக்கு இக்கொடுப்பனவு வழங்காமல் நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்தே மறியல் போராட்டத்தினை விரைவில் நடத்தவுள்ளதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் ஓய்வூதியர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவு அமைப்புகளில் கடமையாற்றுவோரும் இணைந்து போராடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் உலக நாடுகளால் வழங்கப்படும் நிவாரண உதவிகளில் கூட 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் புறக்கணிக்கப்படுவதையும் போராட்டத்தின்போது சுட்டிக்காட்டவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ-117)

**நாளை**

ஐப்பசி 08
வெள்ளிக்கிழமை
(25.10.2002)
திதி: சதுர்த்தி
முன் இரவு 7.15 வரை
நட்சத்திரம்: ரோகிணி
பிற்பகல் 2.37 வரை.
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.31 - 12.01
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

கரத்தை மூடிமறைப்பதைவிட, தரமின்மையை மூடிமறைப்பது கடினமானது.

## கால்நடைப் பண்ணையாளருக்கு பரிசில் வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்.மாவட்டத்தில் சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்க யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் இருந்தும் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை வளர்க்கும் பண்ணையாளர்களில் தலா மூவர் என்ற அடிப்படையில் 90 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இந்தத் தேர்வில் கலந்துகொள்ள விரும்பும் கால்நடை வளர்ப்பவர்களுக்கான விண்ணப்பப் படிவம் அந்தந்தப் பகுதி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. சிறந்த கால்நடைப் பண்ணையாளராகத் தெரிவு செய்யப்படும் 90 பேருக்கு விரைவில் பரிசும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளதாக கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதன் தெரிவித்தார்.

(ஓ-180-86-175)

### தேர்தல் ஆட்சேப மனுக்கள் நிராகரிப்பு:

## நீதியின் பெயரால் வாக்குகள் மீண்டும் எண்ணப்பட வேண்டும்!

### நீதியரசர் தெரிவிப்பு

தேர்தல் ஆணையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 78 மனுக்களையும் நிராகரித்த மேன்முறையீட்டு நீதியரசர் ஷிராணி திலகவர்த்தன தனது தீர்ப்பில் தான் எல்லா மனுக்களையும் நிராகரித்தாலும்கூட மனுவில் கேட்கப்பட்டவை யாவும் நியாயமானவை என்கிறார். எனவே, நீதியின் பெயரால் மீண்டும் வாக்குகளை எண்ணும் நடவடிக்கையைத் தேர்தல் ஆணையாளர் மேற்கொள்ளவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தமது தீர்ப்பில் மேலும் தெரிவிக்கையில்:-

"அரசமைப்பின் 17ஆவது சட்டத்தின்படி தேர்தல் ஆணையாளருக்கு ரிட்மனு அனுப்புவதற்குத் தமக்கு அதிகாரம் இல்லையெனவும், அந்த அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கே உரியதெனவும் - கூறியுள்ளார்.

தாம் அவற்றை நிராகரித்தாலும்கூட அந்த மனுக்களில் கேட்கப்பட்டவை நியாயபூர்வமானவையெனவும் நீதியை அடிப்படையாக வைத்து தேர்தல் ஆணையாளர் வாக்குகளை மீண்டும் எண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார், ஐக்கிய தேசியக் கட்சி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பல அரசியல் கட்சிகள் இந்த 78 மனுக்களையும் தாக்கல் செய்துள்ளன.

### உபகரணங்களை வழங்குவதற்காக

## ஊனமுற்றோர் குறித்த விவரங்களை ஜீ.ரீ.இசற். நிறுவனம் திரட்டுகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.24

ஊனமுற்றவர்களுக்கான உபகரணங்களைப் பெறத் தகுதி உடையோர் குறித்த விவரங்களை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் திரட்டி வருகிறது. ஜேர்மனியிலிருந்து எடுத்துவரப்படவுள்ள சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் போன்றவற்றை இலவசமாக வழங்கவே இந்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இது தொடர்பாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த வருடம் ஜேர்மனியிலிருந்து சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், ஊனமுற்றவர்களுக்கான சைக்கிள்கள் போன்ற பல உபகரணங்களை எடுத்து வந்து யாழ்.மாவட்டமெங்கும் நேரில் சென்று ஊனமுற்றவர்களுக்கு நேரடியாக விநியோகம் செய்த கொடையாளி ஹான்ஸ் பெண்டர் மீண்டும் ஒரு தொகுதி உபகரணங்களுடன் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்வருகிறார்.

ஊனமுற்ற - சுயமாக நடமாட முடியாதவர்களுக்கே உபகரணங்கள் வழங்கப்படும். இவ்வுதவியைப் பெறுவதற்குத் தகுதியான ஊனமுற்றவர்கள் அல்லது ஊனமுற்றவர் நலன்களைப் பேணும் நிறுவனங்கள் உரிய விவரங்களை யாழ்ப்பாணம், கண்டி வீதியில் உள்ள ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

## சி.ஐ.டி.விசாரணையில் முன்னாள் பிரதமர்

இறப்பர் கூட்டுத்தாபனத்தில் 54 கோடி ரூபா ஊழல் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது தொடர்பாக முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஓரிரு நாள்களில் குற்றப் புலனாய்வுப் பொலீஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இந்த ஊழல் தொடர்பாக ரத்னசிறி விக்கிரமநாயக்க விசாரிக்கப்படுவது அவசியம் என குற்றப்புலனாய்வுப் பொலீஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் திறைசேரிச் செயலாளர் ஜி.பி.ஜயசந்திர, குற்றப்புலனாய்வுப் பொலீஸாரின் விசாரணையின் போது வழங்கிய தகவல்களுக்கமையவே முன்னாள் பிரதமர் விசாரிக்கப்படவுள்ளார். (ஓ)

## 'லயன் எயார்' மேலும் ஒரு சேவை

யாழ்ப்பாணம், ஒக்.24

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் மேலும் ஒரு சேவையை இன்று வியாழன் முதல் ஆரம்பிக்க விருப்பதாக 'லயன் எயார்' நிறுவனத்தின் யாழ்முகவர் அறிவித்துள்ளார்.

வாரந்தோறும் புதன்கிழமைகளில் மட்டும் காலை இந்தச் சேவை இடம் பெறும் என்றும் -

ஏனைய தினங்களில் பலாலியில் இருந்து முற்பகல் 11மணிக்கும் மாலை 5.15 மணிக்கும் இரு சேவைகள் இடம்பெறவிருக்கின்றன என்றும் - அவர் தெரிவித்தார். (ஐ-3)

## தேவை

*மின்சார உபகரணங்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. நிறுவனங்களில் விற்பனையாளராகக் கடமையாற்றிய சான்றிதழ்ப் பிரதிகளுடன் விண்ணப்பிக்குக.*

வயதெல்லை:- 25-40 வரை.
கல்வித்தகைமை:- O/L,
ஆங்கிலத்தில் திறமைச்சித்தி (C).
விளம்பர இல.1681,
C/o உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம். (9765)

## 'சீற்' உடைந்து தலையில் வீழ்ந்ததால் மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.24

வீட்டுக் கூரையின் சீற் உடைந்து வீழ்ந்ததில் ஒருவர் மரணமானார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்றது.

வீட்டின் கூரைப்பகுதியில் திருத்த வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் திடீரென சீற் துண்டு உடைந்து இவரது தலையில் வீழ்ந்ததால் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் அங்கு மரணமானார்.

இச்சம்பவத்தில் கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா (வயது49) என்பவரே உயிரிழந்தவராவார். மரண விசாரணையின் பின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-139-17)

## 25 ஆவது வருட திருமண வாழ்த்து



**சொல்வேந்தன் – செலஸ்ரீனா (ரஞ்சினி)**

25ஆவது வருட நிறைவில் இன்று வெள்ளி விழாக்காணும் தம்பதியினரை சிறப்புடன் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

அன்ரனிப்பிள்ளை குடும்பம்.

71, இராசாவின்தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம். (9811)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





**பொன்னையா கதிரவேற்பிள்ளை**
*(முன்னாள் உரிமையாளர், அசோகா போட்டோ, யாழ்ப்பாணம்)*

**திருமதி சின்னம்மா பொன்னுத்துரை**

16.07.1925 ← மலர்வு → 15.04.1912
04.11.2001 ← உதிர்வு → 05.11.2001

*எங்கள் அன்புத் தெய்வங்களே!*
*ஆண்டொன்று மறையலாம் - ஆனால்*
*எம் நெஞ்சில் ஆழப்பதிந்துவிட்ட*
*பாசம் கலந்த உங்கள் நினைவு எம்மைவிட்டு*
*என்றுமே அகலாது.*

உங்கள் இருவரினது நினைவாக இன்று (24.10.2002) வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (9792)

திருமதி கனேஸ்வரி கதிரவேற்பிள்ளை,
மோகனதாஸ் - சிவானந்தி குடும்பம் (பிரான்ஸ்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது விஞ்ஞானபீட மாணவி
சிவராதிகாவின்
அன்புத் தந்தை
அமரர்
**வைத்திலிங்கம் கதிரவேலு**
அவர்களின் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

(9798)

இம்மண்ணில்: 06.03.1943
இறைபாதத்தில்: 24.09.2002

2ஆம் வருட விஞ்ஞானபீட
மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## நெஞ்சை விட்டகலா நினைவஞ்சலி

**6ஆம் ஆண்டு** **3ஆம் ஆண்டு**





அமரர்
**வேலுப்பிள்ளை முருகேசு**
*(முன்னாள் ஊழியர், கொடிகாமம், ப.நோ.கூ.சங்கம்)*

அமரர்
**முருகேசு சின்னத்துரை**
*(முன்னாள் முகாமையாளர், கொடிகாமம் ப.நோ.கூ.சங்க கிளை)*

25-05-1911 ← மண்ணில் → 10-09-1947
02-10-1996 ← விண்ணில் → 27-10-1999

திதி: 24.10.2002

அன்புடனும் அறிவுடனும் எமை அரவணைத்த
அன்புத் தெய்வங்களே!
தந்தையின் வழியைத் தனயனும் பின்பற்றி
சேவை புரிந்தீர்களே!
வேரற்ற ஆலமரமாக விழுதுகள்
தாங்கிட நாமும்
விழி மூடும் நாள் வரையும்
உங்கள் நிழல்தேடி அலைகின்றோம்!

(9783)

*முகவரி:*
*சி.கௌரி*
*குடமியன், வரணி.*

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:* **குடும்பத்தினர்.**

## 75ஆவது ஜெயந்திதின விழா
## 24.10.2002



ஸ்ரீ முருகன் ஆத்மீக

**அருள் மார்க்கண்டு சுவாமிகள்**

மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் இன்று (24.10.2002) வியாழக்கிழமை சுவாமிகளின் 75ஆவது ஜெயந்திதின விழாவை அவரது அருளும், ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள்.

இதில் சுவாமிகளினால் நான்கு பேர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

*மானிப்பாய்.* (9730) - முருகன் அடியார்கள்.



## உரிய காலத்துக்கு முன்பதாக

# நாடாளுமன்றக் கலைப்பும் இல்லை; தேர்தலும் நடத்தப்படமாட்டாது!

## திட்டவட்டமாகக் கூறுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.24

உரிய காலத்துக்கு முன்பதாக நாடாளுமன்றத்தைக் கலைக்கவோ அல்லது தேர்தலை நடத்தவோ போவதில்லை.

நாட்டின் தற்போதைய நிலைமை தேர்தல் ஒன்றை நடத்துவதற்கோ அல்லது அரசியல் அராஜகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கோ உகந்ததாக இல்லை.

- இவ்வாறு கூறினார் ஜனாதிபதி குமாரதுங்க.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தலைவர்களின் கூட்டம் ஒன்று கடந்த திங்களன்று நடைபெற்றபோதே ஜனாதிபதி மேற்கூறப்பட்ட கருத்துக்களை அங்கு தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எதிர்காலப் பணிகள் ஆகியன பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதேசமயம், கடந்த ஞாயிறு அன்று ஹொரகொல்ல பிரதேசத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, இலங்கையின் பொதுத் தேர்தல் ஒன்றை அறிவிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதி என்ற முறையில் தமக்கே உரியது வேறு யாருககுமல்ல என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றம் நிறைவேற்றினால் அதை நடைமுறைப்படுத்தாமல் விடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

கடந்த எட்டு வருடங்களில் நாடு 13 தேர்தல்களை எதிர்நோக்கியுள்ளது.

தற்போதைய அரச மற்றுமொரு தேர்தலை நடத்தவேண்டுமென விரும்புகிறது. நாடு தற்போதுள்ள நிலையில் தேர்தல் ஒன்று அவசியமற்றது.

கடந்த காலங்களில் பொ.ஐ.மு. அரசு ஆரம்பித்து வைத்த அபிவிருத்தித் திட்டங்களைக்கூட அரசு தற்போது இடைநிறுத்தி வைத்துள்ளது.

அத்தோடு அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தி மக்களுக்கு மேலும் சுமையை ஏற்றியுள்ளது அரசு.

தனியார் மயப்படுத்தல்மூலம் தமக்குத் தேவையானவர்களுக்கு அரச நிறுவனங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

நான் 2001ஆம் ஆண்டு நிதி அமைச்சராக இருந்தபோது அத்தியாவசிய தேவைகளுக்காக ஒதுக்கிய நிதியைக்கூட தற்போதைய அரசு இடைநிறுத்தியுள்ளது.

அரச நிறுவனங்களில் கடமையாற்றும் மேலதிக ஊழியர்களை ஓய்வுபெறச் செய்யவும் திட்டம் தீட்டியுள்ளது. ஆனால், அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அமைச்சில் மாத்திரம் ஆயிரக்கணக்கான ரூபா சம்பளம் பெறும் 52 ஊழியர்கள் இவ்வாறு கடமையாற்றுகின்றனர். இந்த நிலைமையில் அரசு மற்றுமொரு தேர்தலை நடத்த முயல்வது நியாயமற்றது - என்றார் ஜனாதிபதி. (ஐ)



# அஞ்சாதீர்கள்! நாங்கள் உங்கள் பக்கம்

# பிரதமருக்கு இம்முறை கூட்டமைப்பு உறுதி!

கொழும்பு,ஒக்.24

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும்வரை ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு பக்கபலமாக இருக்கும்; ஆதரவு வழங்கும். இதில் சந்தேகம் வேண்டாம்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை நேற்றுமுன்தினம் பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்துப் பேசிய தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினர் உறுதி வழங்கியுள்ளனர்.

பிரதமருடனான சந்திப்பு பல சாதகமான அம்சங்களைப் பெறுபேறாகப் பெற்றுத்தந்துள்ளது என்கிறது தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இராணுவம், பொலீஸ்,கடற்படை ஆகியவற்றின் சில அத்துமீறல்கள் குறித்தும், அதில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் கெடுபிடிகள் குறித்தும் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலும் பிரதமரிடம் எடுத்துக்கூறினர்.

படைத்தளபதிகள் நாடு திரும்பியதும் இந்தப் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதி அளித்தார்.

காஞ்சிரங்குடா, திருக்கோயில், அக்கரைப்பற்று அசம்பாவிதங்கள் தொடர்பாகவும் பிரதமரிடம் கூட்டமைப்பினர் எடுத்துக்கூறினர்.

தற்போது நடைபெறும் விசாரணைகள் திருப்தி அளிக்கவில்லை என்றும் மூன்று சம்பவங்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தக் கொழும்பிலிருந்து தனித்தனி விசாரணைக் குழுக்கள் அனுப்பப்படவேண்டும் என்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகவும், பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்த ஏற்பாடு செய்வதாகவும், அக்கரைப்பற்றுச் சம்பவம் தொடர்பாகத் தான் தீவிர அக்கறை கொண்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

# கைது நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது அவசியம்

### ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.24

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகளை அரசோ, சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவோ அல்லது இரண்டு தரப்பினருமோ கட்டுப்படுத்துவது அவசரமும், அவசியமும் ஆகும்.

புளொட் அமைப்பின் மாநகர சபை உறுப்பினரான ஜெயசந்திரன் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ் பெருமாள் அணியின் மாநகரசபை உறுப்பினர் த.சுபத்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) யாழ்ப்பாண முக்கியஸ்தரும் மாநகரசபை உறுப்பினருமான ஜெயசந்திரன் கடந்த 20.10.2002 ஞாயிற்றுக்கிழமை புலிகளால் கைதுசெய்யப்பட்ட சம்பவம் ஜனநாயகம், பன்முகத்தன்மை தொடர்பில் பாரிய அச்சுறுத்தலாகும்.

இவ்வாறு தமக்கு வேண்டாதவர்களை - மாறுபாடான அபிப்பிராயம் உள்ளவர்களை - கைதுசெய்வது, தாக்குவது போன்ற சம்பவங்களை எந்தவிதத்திலும் நியாயப்படுத்தமுடியாது. சுதந்திரமான கருத்து வெளியீடு, ஒரு மனிதனுக்குள்ள சுதந்திரமான நடமாட்ட உரிமை தொடர்பான பாரதூரமான பிரச்சினையுமாகும்.

இத்தகைய நடவடிக்கைகளை அரசோ, சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ அல்லது இரண்டு தரப்பினருமோ கட்டுப்படுத்துவது அவசரமும் அவசியமானதும் ஆகும். அவர்களது கடமையுமாகும்.

இத்தகைய நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவை. மக்களையும் மாற்று அரசியல் சக்திகளையும் விரக்தியடையச் செய்யும்.

மனித உரிமை ஜனநாயகத்தில் அக்கறை கொண்டோர் இத்தகைய விடயங்களில் கூடிய அக்கறை செலுத்த முன்வரவேண்டும் -

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## இலங்கையில் தங்கியுள்ள

# பிரிட்டிஷ், ஐரிஷ், நியூசிலாந்து குடியுரிமை பெற்றோருக்கு!

கொழும்பு,ஒக்.24

இலங்கையில் தங்கியுள்ள பிரிட்டிஷ் குடியுரிமை பெற்றவர்களை பதிவுசெய்யும் நடவடிக்கையை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகம் மேற்கொண்டுள்ளது. அயர்லாந்து அல்லது நியூசிலாந்து குடியுரிமை உள்ளோரும் இப்பதிவை மேற்கொள்ளலாம்.

குறிப்பிட்ட 3 நாடுகளில் ஏதாவது ஒன்றின் குடியுரிமை பெற்றவர்களும் இந்த நாடுகளில் ஏதாவது ஒன்றின் குடியுரிமையுடன் இலங்கையின் குடியுரிமையும் பெற்று இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களும் இந்தப் பதிவை மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பதிவை மேற்கொள்வதன்மூலம் இலங்கையில் வசிக்கும் இத்தகையோரின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு, அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியுமென பிரட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளாதோரின் விவரங்கள் தமது மூலத் தரவிலிருந்து நீக்கப்பட்டுவிடும் என்றும் தூதரகம் எச்சரித்துள்ளது.

கொழும்பு, காலி வீதியிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துடன் நேரிலோ, தொலைபேசி, கடிதம், ஈ-மெயில், பக்ஸ் மூலமாகவோ தொடர்புகொண்டு இப்பதிவை மேற்கொள்ளலாம். (ஒ)



நேற்றுமுன்தினம் காலை விபத்துக்குள்ளாகி குளியாப்பிட்டி நிக்காவத்தையில் உள்ள தென்னந்தோப்பொன்றில் விழுந்த கிபீர் யுத்த விமானத்தின் சிதைவுகளைப் படத்தில் காணலாம்.

# வடக்கு-கிழக்கில் 3,000 ஆசிரியர் வருட இறுதிக்குள் நியமனமாவர்

இவ்வருட இறுதிக்குள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு மூவாயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். அதேவேளை, மலையகத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்படும்.

கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

அகில இலங்கை ரீதியாகப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் கல்வித்தரம் பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளது. எனவே, இது தொடர்பாகக் கல்வி அமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்று ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எம்.பி. கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறுகூறினார்

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு உலக வங்கியுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளது. அதன்படி வீண்விரயங்கள் குறைக்கப்படவேண்டும். ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு, மேலதிகமான ஆசிரியர்கள் இருக்கும் பாடசாலைகளில் இருந்து இடமாற்றங்களைச் செய்து சமன்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இன்றைய நிலையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, இப்பிரதேசத்திற்கு மூவாயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

இப்பதவிகளுக்கு பட்டதாரிகளும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரிகள் என்பனவற்றில் பயிற்சியை முடித்துக்கொண்டவர்களுமே நியமிக்கப்படுவர். ஏற்கனவே வடக்கில் 193 தொண்டர் ஆசிரியர்களுக்கு மாகாணசபையின் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, மலையகத்திலும் ஆசிரியர் பற்றாக்குறை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, மலையகப் பாடசாலைகள் தொடர்பாகவும் அரசு கூடுதல் அவதானம் செலுத்தும். ஆனால், இன்றைய நிலையில் சிங்கள மொழிப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை.

இப்படி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு பதில் அளித்தார்.

இவ்வேளையில், குறுக்கிட்ட ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, உலக வங்கியே புதிய நியமனங்களை வழங்கக்கூடாது என்று கூறியிருக்கும்போது தமிழ்ப் பாடசாலைகளுக்கு மட்டும் எப்படி நியமிக்க முடியும்? என்று கேட்டார்.

"உலக வங்கி எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டாம் என்று கூறவில்லை.

"சிங்களத் தேசிய பாடசாலைகளிலும் நகர்ப்புறங்களிலுள்ள சிங்களப் பாடசாலைகளிலும் தேவைக்கு அதிகமாக மேலதிகமான ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

"இவர்களை கிராமப்புற பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யும்போது அவர்கள் அரசியல் செல்வாக்கைப் பிரயோகித்து மீண்டும் பழைய பாடசாலைகளுக்கே வந்துவிடுகின்றனர்.

"இதனால்தான் கிராமப்புற சிங்களப் பாடசாலைகளில் ஆசிரியப் பற்றாக்குறை நீடிக்கின்றது.

"எனினும், இப்பொழுது நாம் தேசிய இடமாற்றத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துகின்றோம். இதன் மூலம் சிங்களப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்படும்"- என்றார் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு. (ஐ)

## கூரைத்தகடுகள் அகற்றப்படுகின்றன

தென்மராட்சி,ஒக்.24

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தில் உள்ள அரங்கின் கூரைத் தகடுகள் மற்றும் மரங்கள் படையினரால் கடந்த திங்கட்கிழமை அகற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன.

சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது நூறு அடி நீளமான இந்த அரங்கு கட்டடம் சேதமின்றித் தப்பியமை குறிப்பிடத்தக்கது.

யுத்தநிறுத்தம் அமுலில் உள்ள வேளையில் இந்த அரங்கு கட்டடக் கூரைகள் அகற்றப்பட்டது குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. (3-17)

## ஆங்கில பாட செயலமர்வுகள்

தென்மராட்சி,ஒக்.24

உலகளாவிய ஆங்கில ஆசிரியர் வாண்மை விருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

லண்டன் திரித்துவக் கல்லூரியின் விரிவுரையாளர்களால் இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும் எனவும்

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் ஆங்கில பாடம் கற்கும் மாணவர்களும், ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வகுப்பில் ஆங்கில இலக்கியம் கற்கும் மாணவர்களும் இதில் கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# வங்கிப் பரீட்சையில் ஒருவரே சித்தி!

யாழ்ப்பாணம்,ஒக்.24

இலங்கை வங்கி அண்மையில் முகாமைத்துவ பயிலுநர்களுக்கு நடத்திய உள்ளகப் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரே சித்தியடைந்துள்ளார். ரி.தயாளன் என்பவரே சித்தியடைந்தவராவார்.

இந்தப் பரீட்சையில் 335 பேர் தோற்றியபோதும் 79 பேர் மட்டுமே சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## மெய்ப்பொருள் சஞ்சிகை வெளியீட்டுவிழா

*காலம்:* இன்று (24.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி.

*இடம்:* புவியியற்துறை மண்டபம்.

*தலைவர்:* செ.ரூபகுமார்

*(இந்து பண்பாட்டுக் கழகம், யாழ்.பல்கலைக்கழகம்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இந்து பண்பாட்டுக்கழகம்,
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(9828)

## கோப்பாயில் நாய்த்தொல்லை அதிகரிப்பு

வலி.கிழக்கு,ஒக்.24

கோப்பாய்ப் பகுதியில் கடந்த மாதம் நாய்க்கடிக்கு இலக்காகிய 62 பேர் கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இப்பகுதியில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-180)

## 1500 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

வலி.கிழக்கு,ஒக்.24

ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதை அடுத்து வன்னி நிலப்பரப்பில் இருந்து இதுவரை கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 500 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

முதற்கட்டமாக ஆயிரத்து 431 குடும்பங்களும் இரண்டாம் கட்டமாக 115 குடும்பங்களுமே மீளக்குடியமர்ந்துள்ளன. (ஒ-180)

## அறநெறி பாடசாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

சுன்னாகம் ஐக்கிய நாணயச் சங்கத்தினால் சிவன் அறநெறிப் பாடசாலை ஒன்று அண்மையில் மயிலணி சிவன் கோயிலில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சங்கத்தின் தலைவர் க.சின்னராசா தலைமையில் விஜயதசமியன்று நடந்த இந்த வைபவத்தில் சமயப் பெரியார் வ.குமாரசாமி பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பாடசாலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அன்றைய தினம் 30 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களுக்கான வகுப்புகள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறும். (ஒ-3)

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

2002.10.23ஆம் திகதி யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செல்லத்துரை கனகசபாபதி அவர்களால் கூட்டுறவு பரிசோதகர் திரு.இராசையா விஜயமோகனராஜா ஆகிய எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய கூட்டுறவுச் சட்டங்களின் கீழாக ஆக்கப்பட்ட விதி பிரிவு 18 (1) இன் கீழ் வரையுள்ள வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தை பின்வரும் நிகழ்ச்சி நிரலுக்கமைய அழைக்கின்றேன். இக்கூட்டத்திற்கு சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்.

*நிகழ்ச்சி நிரல்:* *இடம்:* சங்க மண்டபம்
*நாள்:* 01.11.2002
*நேரம்:* மு.ப. 9.00மணி

*விடயம்:*
1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. சங்கத்தின் புனரமைப்புப் பற்றி ஆராய்தல்
4. இயக்குநர்சபைத் தெரிவு
5. நன்றியுரை

இ.விஜயமோகனராஜா,
*கூட்டுறவுப் பரிசோதகர்.*

(9837)

## குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்



## முதியோர்தினம் - 2002

இடம்: வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் *(உரும்பிராய்)*

காலம்: 27-10-2002 ஞாயிறு முற்பகல் 9.30 மணி

தலைவர்: திரு.ரி.வி.கிருஸ்ணசாமி *(நிலையத் தலைவர்)*

பிரதம விருந்தினர்: திருமதி பாலாம்பிகை சிறீபாஸ்கரன் *(தலைவர், வலிகாமம் வடக்கு - பிரதேச சபை)*

இவ்வைபவத்தில் குரும்பசிட்டியைச் சேர்ந்த 70வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களுக்கும் மற்றும் விதவைகள், ஊனமுற்றோர், ஆதரவற்றோர்களுக்கும் தீபாவளித்தின அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

*குறிப்பு:* அன்பளிப்புக்களைப் பெறத் தகுதியானவர்களுக்கான பதிவு அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் காலை 8.30 மணிமுதல் இடம்பெறும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தலைவர்,
குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்.

(9835)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் முதலாம் வருட ஆரம்பநெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி ஏ.அன்பரசி அவர்களின் அன்புத் தந்தையார்

### த.துரைசிங்கம்

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை
சமூகத்தினர்.

*கோப்பாய்.* (9832)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் 2ஆம் வருட ஆங்கிலநெறியைச் சேர்ந்த திருமதி செ.தவராசா அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் த.இரத்தினம்

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

(9833)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 1944 - 07 - 02



இறப்பு 2002 - 09 - 23

### அமரர் தம்பிப்பிள்ளை பாலசிங்கம்

*அன்பு முகம் மறைந்து முப்பத்தொரு நாளும் ஆயிற்றோ?*
*ஆதரவாய்ப் பேசிய நீங்கள் மறைந்து போனதேனோ?*
*இன்முகம் காட்டி எம்முடன் வாழ்ந்த அன்னாவே!*
*எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டீர்களே!*
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (24.10.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பலாலி வீதி,*
*இராமகிருஷ்ணா லேன்,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.* (9834)

த.துரைவீரசிங்கம் குடும்பத்தினரும்,
சகோதரர்களும்.

இதோ யாழ்.நகரில!

WINTO

6, நவீன சந்தை (மேல்மாடி),
மக்கள் வங்கி K.K.S. கிளைக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

உங்கள் வசதிக்காக,
- இன்ரனெற் தொலைபேசி அழைப்புக்கள் ஒரு நிமிடம் 35/=
- ஈ-மெயில்
- கணனி தட்டெழுத்து

மக்கள் நலன்கருதி சில நிமிடங்கள் உள்வரும் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்.

(9830)

KOBE® 52 அன்டனா & பூஸ்டர்
துருப்பிடிக்காதது எத்திசையிலும் இயங்கக்கூடியது

VHF/UHF தொலைக்காட்சிக்கும் FM வானொலிக்கும் உள்ளிணைப்புடன் கச்சிதமான வெளிக்கள அன்ரனா
- நவீன தொழில்நுட்பத்துடன் நேர்த்தியான வடிவமைப்பு
- தண்ணீர் உட்புகாத முழுமையான கவசத்தினாலானது
- மின்சாரத்திலும், பற்றரியிலும் இயங்கக்கூடியது
- நம்பகமான உயர் தொழில்நுட்ப பூஸ்டர்களுடன் இணைக்கப்பட்ட KOBE அன்டனா

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் அனைத்து நிப்போன் முகவர்களிடமும்

1 வருட உத்தரவாதம்



லங்கா நிப்போன்
18, கெய்சர் வீதி, கொழும்பு-11.
தொ.பே: 437735, 324726, 335301
தொ.ந : 437736

காட்சியறை
10, ரேலோனி ஒழுங்கை, பம்பலப்பிட்டி
கொழும்பு-04.
தொ. பேசி: 589992, 582365

❖ யாழ். மாவட்டத்திற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது

Euroville Electronics - Computer Service Division



மீண்டும் யாழ்.நகரில் Euroville Electronics நிறுவனத்தினர் தமது கணனிசார் சேவைகளை விஸ்தரிக்கவுள்ளனர். அதன் பொருட்டு அரச, அரசசார், அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகம் மற்றும் தனியார் நிறுவனங்களில் உள்ள கணனி, கணனிசார் உபகரணங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் சேவைகளை குறுகியகால இடைவெளியிலும், குறைந்த செலவிலும் வழங்கவுள்ளனர். மேலும் எமது சேவைகளில் சில:

- வாடிக்கையாளர் தேவைக்கும், விருப்பத்திற்குமேற்ப தரமான கணனிகளை அமைத்துக் கொடுத்தல்.
- விற்பனைக்குப் பிந்திய பராமரிப்புக்களை வழங்குதல்.
- நடமாடும் சேவையினை வழங்குதல்.
- உங்களிடம் உள்ள கணனிகளைப் பராமரித்தல், தரம் உயர்த்தல் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- உங்களிடம் உள்ள பழைய இயங்கும், இயங்காத நிலையில் உள்ள கணனிகளை உங்கள் தேவைக்கேற்ப வடிவமைத்துக் கொடுத்தல்.



*தொடர்புகளுக்கு:*
Euroville,
866, Point Pedro Road,
Jaffna.
Phone: 021-2222849

(9836)

## தமிழ்த் தேசியம் வெற்றிபெற பல தடைகள், சவால்கள்

# தமிழர் விடுதலை முழுமைபெற தமிழகமும் மீட்கப்பட வேண்டும்!

## அதற்கு அங்கும் ஒரு பிரபாகரன் தேவை என்கிறார் திருமாவளவன்

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்24

ஈழத்தமிழனம் விடுதலை பெறும்போது அந்த விடுதலை முழுமை பெறவேண்டுமானால் தமிழகமும் மீட்கப்படவேண்டும். அதற்கு அங்கும் ஒரு பிரபாகரன் தேவைப்படுகின்றான்.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் சட்டசபை உறுப்பினருமான இரா.திரு மாவளவன் இவ்வாறு வலியுறுத்திக் கூறினார்.

'மானுடத்தின் தமிழ்க் கூடல்' இறுதி நாள் நிகழ்வில் சிறப்புரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருமாவளவனின் சிறப்புரையின் முதற் பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. அதன் எஞ்சிய பகுதி இங்கு பிரசுரமாகிறது.




ஓர் இனத்தின் விடுதலைக்காக - ஓர் இனத்தின் வரலாற்றை மீட்பதற்காக - போராடுவது பயங்கரவாதமாகாது. அப்படிப் பிரசாரம் செய்கின்ற ஊடகங்களுக்கு எதிராக நாம் போராட வேண்டி இருக்கிறது. இன்று விடுதலைப் புலிகளுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் உள்ள மிகப்பெரிய சவால் இதுதான்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்ததையிலாலேயே, தமிழகத் தமிழர்கள் ஈழத்தமிழர்களை வெறுக்கிறார்கள் என்ற கருத்து தமிழ்நாட்டிலே பேசப்படுகிறது; பரப்பப்படுகிறது; விவாதிக்கப் படுகிறது. ஆனால், ராஜீவ் காந்திக்கு சிங்கள பேரினவாத அரசு இங்கு வரவேற்பளித்தபோது கடற்படையைச் சேர்ந்த ஒரு சிங்களவன், ராஜீவ் காந்தியைக் குறி வைத்து பிடரியிலே அடித்துக் கொலை செய்ய முயற்சித்தான். அந்தச் செய்தி தமிழகத்திலே பெரியளவில் விவாதிக்கப்பட்டதா? பேசப்பட்டதா? அதற்காக இந்திய அரசு, இலங்கை அரசுமீது கோபப்பட்டதா? அது சாதாரண செய்தியாக மாற்றப்பட்டது. அப்பொழுது அதைக் கண்டித்து ஈழத் தமிழர்கள் நடத்திய போராட்டம் இந்திய மக்களிடத்தில் எடுத்துச் சொல்லப்படவில்லை. அதைக் கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தமிழக ஊடகங்களில் வரவில்லை. ஆனால், ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட செய்தி மிகப் பெரிய அளவில் பரப்பப்பட்டு. ஒட்டு மொத்த தமிழக மக்களும் ஈழவிடு தலைப் போராட்டத்தையே வெறுக்கக் கூடிய அளவுக்கு ஊடகங்களிலே தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஈழவிடுதலைப் புலிகளின் போராட்ட நியாயத்தையும் இந்திய அரசுடன் முரண்பட்டதற்கான காரணத் தையும் சரியான முறையிலே எடுத்துச் சொல்ல வேண்டிய மிகப் பெரிய சவால், பொறுப்பு ஊடகத் துறைக்கு இருக்கிறது.

இந்திய அரசினுடைய குறுக்கீடு தொடர்ந்து இருக்கின்ற வரையில் ஈழவிடுத லைப் போராட்டத்திற்கு அது மிகப்பெரிய தடை. இந்திய அரசோடு ஏற்படுகின்ற நல்லிணக்க உறவுதான், இந்திய அரசோடு ஏற்படக்கூடிய உடன்பாடான கருத்தியல் தான ஈழ விடிவுக்குப் பாதை அமைக்கும். இதிலே யாரும் முரண்படமுடியாது.

தமிழகம், சாதி அமைப்பைக் கட்டிக் காக்கின்ற இந்துத்துவத்தில் மூழ்கியிருக் கிறது. இதிலிருந்து விடுபடாமல் தமிழ்த் தேசியம் முழுமைபெற முடியாது. இந்த அடிப்படையிலேயே விடுதலைச் சிறுத் தைகள் அமைப்பு தமிழகத்திலே செயற் படுகிறது. ஒரு லட்சம் தமிழர்களும் 17 ஆயிரத்து 648 மாவீரர்களும் உயிர்த்தியா கம்செய்து - மிகப்பெரிய விலை கொடுத்து - ஈழத்தமிழினம் விடுதலை பெறும்போது அந்த விடுதலை முழுமை பெற்றதாக அமை யவேண்டும். இத்தகைய தமிழகத்தை மீட்டெடுக்க அங்கேயும் ஒரு பிரபாகரன் தேவைப் படுகிறான்.

### புலிகளுக்கு இது பின்வாங்கலா?

இன்று ஈழமக்கள் சிறிது இளைப்பாறும் திசையிலே தலைவர் நின்று கொண்டிருக் கிறார். இன்றைக்கு முன்வைக்கும் இதே கோரிக்கைகளைத் தான் அன்றைக்குத் திம்புவிலும் முன்வைத்து, புலிகள் பேச்சுக்களில் ஈடுபட்டார்கள். அன்றைக்கு இதனை ஏற்கோதவர்கள் - இன்றைக்கு வரவேற்கிறார்கள். புலிகள் தங்களுடைய கோரிக்கையிலிருந்து பின்வாங்கிவிட் டார்கள் என்று பிரசாரமும் செய்கிறார்கள்.

இத்தகைய பிரசாரங்களை முறியடித்து, சரியான கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டிய பெரும் பொறுப்பு ஊடகவியலாளர்களுக்கு இருக்கிறது.

விடுதலைப் புலிகள் இனவிடுதலையைக் கைவிட்டுவிட்டார்களா? விடுதலைப்புலிகள் தம்முடைய கொள்கைப்பிடிப் பிலிருந்து தளர்வடைந்துவிட்டார்களா? விடுதலைப்புலிகள் தாம் முன்னெடுத்து வைத்த காலைப் பின்வாங்கிக் கொண்டார்களா? விடுதலைப்புலிகள், சர்வதேச அரங்கிலே விடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு அஞ்சி - அடிபணிந்து - பேச்சுக்களுக்கு வந்துள்ளார்களா?

அமெரிக்கா உலகளாவிய பயங்கரவாதத்தை எதிர்த்து - உலகநாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துக்கொண்டிருக்கும் சூழலில் - விடுதலைப் புலிகள் அச்சப்பட்டு, பின்வாங் கித்தான், இந்த சமாதானப் பேச்சுக்களுக்கு உடன்பட்டிருக்கிறார்கள் என்ற பிரசாரம் வலுவாக மேற்கொள்ளப்படுகிறது. இதனை முறியடிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் ஊடகவியலா ளர்களுக்கு இருக்கிறது.

தமிழகத்திலே சிலர் என்னிடம் இது பற்றிக்கேட்டார்கள். திம்புப் பேச்சுக்கள் நடைபெற்ற போது எந்த அமெரிக்க கட்டடமும் தாக்கப்படவில்லையே! உலகளாவிய பயங்கரவா தத்தை எதிர்க்க யாரும் அப்போது வரவுமில்லை - புலிகளை யாரும் அச்சுறுத்தவுமில்லை. சமா தானத்தை எதிர்பார்த்துத் தானே, திம்புவுக்கு வந்தார்கள்.

தந்தை செல்வநாயகம் காலத்திலிருந்து போராட்டம் என்ன சொல்கிறது. எங்களை நாங்களே ஆண்டு கொள்கிறோம். இதைத்தானே வலியுறுத்துகிறது. இதில் எங்கிருந்து விடு தலைப்புலிகள் பின்வாங்கியிருக்கிறார்கள். ஆனால், மிக மோசமான பிரசாரங்கள் இடம்பெறுகின்றன. பிரபாகரனால் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்ல முடியவில்லை. பிர பாகரன், தன் கொள்கைப்பிடிப்பிலிருந்து பின்வாங்கிவிட்டார். தனி ஈழம் என்கின்ற கோரிக்கையை கைவிட்டுவிட்டார். ஏதேதோ பூசிமெழுகுகிறார் என்று பிரசாரம் செய்யப்படுகிறது.

பிரபாகரன், தாயகம் வேண்டு மென்கிறார். தேசிய இனம் அங்கீகாரம் வேண்டும் என்கிறார். சுயநிர்ணய உரிமை வேண்டு மென்கிறார். இந்த நியாயமான அரசியல் ஊடகவியலாளர் களால் மறைக்கப்பட்டுள்ளது.

### இந்திய ஊடகங்களின் இருட்டடிப்பு

இந்திய ஊடகங்கள் எல்லாம் ஈழத்தமிழர்களுக்கு, ஈழவிடுதலைக்கு எதிரானவை. சிங்கள ஊடகங்கள் எப்படிச் செயற்படுகின்ற என்பது உங்களுக்குத் தெரியும். சிங்கள ஊடகங்கள் அப்படிச் செய்வதில் தவறு இல்லை. ஏனெனில், சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கு மிடையே முரண்பாடு முற்றி மிகப்பெரிய அளவிலே மோதல் நடந்துகொண்டிருக்கின்ற சூழலில் சிங்கள ஊடகங்கள் தமிழினத்துக்கு எதிராக - புலிகளுக்கு எதிராக - எதிர்ப்பிரசாரம் செய்வதில் தவறொன்றுமில்லை. ஆனால், இந்திய ஊடகங்கள் அதைச் செய்கின்றன. சொல்லப்போனால், இந்துத்துவவாதிகள் எல்லாம் பௌத்தத்தை எதிர்த்திருக்கவேண்டும். அவர்களும் இவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். தமிழர்களை இந்திய இராணுவம் பாதுகாத்திருக்க வேண்டும். ஆனால், அவர்களும் இங்கே வந்து வல்வெட்டித் துறையிலே தமிழர்களை படுகொலை செய்தார்கள். தமிழீழமெங்கும் கொடுமை செய்தார்கள்.

இராணுவத்தளத்திலே ஈழத்தமிழன் இன்று உலகத் தரத்துக்கு உயர்ந்துவிட் டான்.

சிங்கள பேரினவாத அரசு இன்று இராணுவ ரீதியில் தோற்றுப்போயுள்ளது. இதுவே சமாதானப் பேச்சுக்கு அடிப்ப டைக் காரணம். சிங்களப் பேரரசால் இனி மேல் விடுதலைப் புலிகளை எதிர்த்து களம் காணமுடியாது. ஏராளமான வெற்றி களை விடுதலைப் புலிகள் குவித்துக்காட் டியுள்ளார்கள். அதற்கு ஆனையிறவு முகாம் சான்று. இராணுவ ரீதியில் இன்று அவர்கள் கையாளுகின்ற யுத்திகள், தந்திரோ பாயங்கள் வளரும் நாடுகளுக்கே வழி காட்டிகளாக இருக் கும் அளவுக்கு, நாம் உலக நாடுக ளுக்கே அவர்கள் தலைமை தாங்கக் கூடிய அளவுக்கு, இராணுவ ரீதியிலே ஆளுமைபெற்ற அமைப்பை தமிழ் மண் பெற்றிருக்கிறது.

இந்த வரலாற்றை முழுமையாக மீட்கவேண்டிய பொறுப்பு, உண்மை வரலாற்றை மக்களுக்குச் சொல்லி வென்றெடுக்கும் பொறுப்பு மிகப் பெரியது. இந்த வகையிலே கலை, பண்பாட்டுத் தளத்தைச் சார்ந்தவர் களின் பணி சிறப்பாக அமையவேண் டும். இல்லையேல் நாம் செய்த இத் தனை தியாகங்களுக்கும் உயிரில்லா மல் போய்விடும். அர்த்தமில்லாமல் ஆகிவிடும். ஆகவேதான், ஈழ விடுத லைப் போராட்டத்தின் உண்மையான நிலை, அதன் பின்னணி அரசியல் பாரம்பரியம் போன்றன போதுமான அளவிலே மக்களைச் சென்றடைய வேண் டும் என்பதை நாம் உணர வேண்டும்.

பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய - தேசிய சுயநிர்ணய உரிமையை - முன்வைத்து தற்போது சமாதானப் பேச்சுகள் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன. இந்தப் பேச்சுக்கள் வெற்றி பெறும் என்று நாங்கள் நம்புகிறோம். இலங்கை அரசியல் சூழல் அத்தகைய நிலைமைக்குள் ஆட்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

தமிழ்த் தேசியத் தளபதி தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழீழம் வெல்லும். அதை யாராலும் தடுக்கமுடியாது.

'மானுடத்தின் தமிழ்க் கூடல்' மாநாட்டுக்கான மகுடச்சின்னம் குறித்து திருமாவளவன் அளித்த விளக்கத்தை அவையினர் பலத்த கரகோஷம்செய்து வரவேற்றனர்.

திருமாவளவன் மகுடச்சின்னம் குறித்து அளித்த விளக்கம் வருமாறு:-

இந்த 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' விழாவுக்கான சின்னத்தை வரைந்திருக்கிறீர்களே; இதனை என்ன அடிப்படையில் வரைந்தீர்கள். மூன்று உருவத்தை வரைந்து மேலே கிரீடம் போலவும் ஒன்று உள்ளதே. இதற்கு என்ன பொருள் என்று தமிழக ஓவியர் மருதுவிடம் கேட்டேன்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் உணர்த்தும் வகையில் உள்ளே மூன்று உருவங்களை வரைந்து, அவை சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தீபத்தைப்போல் இருப்பதாக இதனை வரைந்தேன் என்று அவர் கூறினார்.

எனக்கு அது அப்படித் தெரியவில்லை. நான் இதை எப்படிப் பார்த்தேன் என்றால், நீங்கள் தீபம் என்று சொல்லுகிறீர்களே! அது எனக்கு தமிழீழத்தைப்போல் தெரிகிறது. தமிழீழத்தின் வடிவத்தைக் காட்டுகிறது. கீழே இருக்கும் மூன்று குறியீடுகளும் எனக்கு இராணுவம், அரசியல், பண்பாடு ஆகிய மூன்று தளங்களாகவே தெரிகின்றன. இந்த மூன்று தளங்களிலும் இருந்து, வியூகம் அமைத்துப் போராடினாலேயே தமிழீழத்தை வென்றெடுக்க முடியும் என்பதை காட்டுவதுபோல் இருக்கிறது என்று நான் கூறினேன்.

*பாழ்ந்தமிழன் வீரம் இன்னும் பட்டுப் போகவில்லை.*
*தமிழ்ப் பரம்பரைக்கோ சரணாகதி பழக்கம் என்றுமில்லை.*
*பாருக்கிதை உணர்த்துகிறான் தம்பி வேலுப்பிள்ளை.*
*அவன் பக்கம் செல்லத் தகுதி நம்மில் யாருக்குமே இல்லை!*

- என்று ஒரு கவிதையைப் ஆண்டுகளுக்கு முன்னால் கல்லூரி மாணவனாக இருந்தபோது நான் எழுதினேன். அதை மீண்டும் நினைவுபடுத்தி, அமைகிறேன் - என்று தெரிவித்தார்.

(ஐ-9)

## சட்டபீடம் ஆரம்பிக்க விசேட குழு நியமிப்பு

யாழ்ப்பாணம் ஒக்.24

யாழ்பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தை ஆரம்பிக்கத் தேவையான ஏற்பாடுகளைக் கவனிக்க விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்பல்கலைக்கழக பேரவையின் கூட்டம் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்தவேளை இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக்குழுவில் பேராசிரியர் வி. கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் சத்தியசீலன், எம்.நடராஜசுந்தரம், கலாநிதி மணிவாசகர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

பீடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் பாடவிதானம் தயாரித்தல் போன்ற பணிகளை இக்குழு மேற்கொள்ளவிருக்கின்றது.

கொழும்பு சட்டக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விரைவாகச் சட்ட பீடத்தை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை இந்தக் குழு மேற்கொள்ளும். (ஐ-3)

# ஊவா மாகாணசபை உறுப்பினர் சென்னன் இன்று கட்சி மாறுவார்

கொழும்பு,ஒக்.24

ஊவா மாகாணசபை எதிர்க் கட்சியான ஐ.தே.கவின் உறுப்பினர் ரி.வி.சென்னன் ஆளும் கட்சியான பொ.ஐ.முன்னணியில் இணையத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

ஐ.தே.க அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் இ.தொ.காவின் விருப்பப்படி தன்னை மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க கட்சியின் பொதுச்செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டார் எனவும் அந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து பொ.ஐ.முன்னணியை ஆதரிக்க தான் தீர்மானித்திருப்பதாகவும் சென்னன் தெரிவத்திருக்கின்றார்.

(ம)

## ஆசிரிய ஆலோசகர் கூட்டம்

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர்களுக்கான முக்கிய கூட்டம் நாளை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல ஆசிரிய ஆலோசகர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவேண்டும்மென வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ)


## தேவை

22 - 30 வயதுக்குட்பட்ட ஆண் பணியாளர் தேவை. இலத்திரனியல் அறிவு விரும்பத்தக்கது.

தொடர்பு:-

**மூர்த்தி வீடியோ**

யாழ். வீதி மானிப்பாய்.

T.P. : 021-2222884

(C24895)



## தேவை

பேக்கரிக்கு விற்பனையாளர்கள், உதவியாளர்கள் (தட்டு) தேவை. நேரில்வரவும்.

*118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

(9845)


## காணவில்லை

அரசடிச் சந்தி, நவாலியைச் சேர்ந்த சீ.சிவராஜேஸ்வரன் என்பவருக்குச் சொந்தமான Blacky என்றழைக்கப்படும் மண்ணிறமுடைய டட்சோன் (Dacshound) கட்டை இன ஆண் நாய் 22.10.2002 முதல் காணவில்லை. நாய் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(9842)

## கண்ணீர் அஞ்சலி

"மிதிலை" கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த எங்கள் ஓய்வு பெற்ற அதிபர்

**தம்பிராசா இரத்தினம்**


(யா/இமையாணன் அ.த.க. பாடசாலை)

அவர்கள் காலமாகியதையிட்டு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம். அமரரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு மாணவர்கள்:

*கரவெட்டி.* ம.குட்டித்தம்பி, ம.தேவராசா, ம.யோகராசா, ம.சிவகாந்தி.

(9849)

# தென் கிழக்கு ஆசியாவில் நவீன தொழிற்சாலையின் தரமான உற்பத்தி...



# றைனோ

- அதிக சக்தி ● 40 வருட நம்பிக்கை ● நீண்டகால பாவனை
- ரசாயனத்தினால் பாதிப்படையாதவை ● தீ பாதிப்பையும் தாங்கக்கூடியவை
- இரைச்சலை உறிஞ்சும் ● பொருத்துவது மிகச் சுலபம்
- குறைந்த மரச் செலவு

RHINO

றைனோ ரூவ்பிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட்

உறுதியான கூரைக்கு இறுதியான தெரிவு!

752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9 தொலைபேசி: 693694, 674765 பெக்ஸ்: 698037

நம்: 1 நம்பிக்கையானது நம்: 1 பிரசித்தமானது நம்: 1 சக்திமிக்கது

SLS

DNV Accredited by the RvA

ISO-9002 REGISTERED FIRM DNV Certification B.V., NETHERLANDS

Access Graphics


# பரிசளிப்பும் நிறுவுநர் தினமும்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபர் க.அருணாசலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

### மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலகத்திற்கான

## கோட்டக்கல்வி அலுவலர் நியமனம்

மருதங்கேணி, உடுத்துறை, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, தாளையடி, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்வு ஏற்பட்டதால் அப்பகுதிப் பாடசாலைகளின் புனரமைப்பு, கல்வி அபிவிருத்தி என்பனவற்றை மேற்பார்வை செய்வதற்கு அப்பகுதியில் கோட்டக்கல்வி அலுவலகம் அமைத்து, கோட்டக கல்வி அலுவலர் முழு நேரமும் செயற்படவேண்டியுள்ளதால், இப்பகுதிக்கான கோட்டக் கல்வி அலுவலர்க்கான விண்ணப்பங்கள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் கோரப்படுகின்றது. இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1இல் உள்ளோர் தமது சுயவிவரங்களைக் கொண்ட விண்ணப்பத்தை 2002.10.31அம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வே.தி.செல்வரத்தினம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

*வலயக்கல்வி அலுவலகம்,*
*வடமராட்சி.*

(C-24393)

## மூன்றாவது வருட அஞ்சலி



மலர்வு 20.10.1968 உதிர்வு 24.10.1999

**அமரர் மகாதேவா ரவீந்திரன்**

*அன்பின் வடிவத்தை இழந்து ஆனதோ மூன்று வருடம்*
*இதயத்தை நெருடும் உமது நினைவலைகள்*
*இன்று எம் நெஞ்சத்தை வாட்டி வதைக்கின்றதே*
*அன்று என் வாழ்வுக்கு அத்திவாரமிட்டதை*
*என்றும் மறக்கமாட்டேன்! கண்ணீர்தான் மீதி!*

இன்று (24.10.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.30,*
*முதலாம் ஒழுங்கை,*
*அரசடி, நல்லூர்.*

(9843) **R.சிறி** *(மைத்துனர்).*

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் நிர்மாண இயக்குநர்
க.வைத்திலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார்

**வைத்திலிங்கச் செட்டியார் கந்தப்பச் செட்டியார்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யூரோவில்,*
*866, பருத்தித்துறை வீதி, நல்லூர்.* (9844)

**யூரோவில் சமூகத்தினர்**

## அஸ்தி நல்லடக்கம்

19.10.2002 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த

**திருமதி அனா.சிரோன்மணி பெனி இராஜரட்ணம்**

அவர்களுடைய அஸ்திக்கான ஆராதனை அவரது உடுவில் இல்லத்தில் இன்று (24.10.2002) வியாழக்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெறும். அந்த ஆராதனையை அடுத்து அஸ்தி ஏழாலை தெற்கு தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்புள்ளங்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

*மானிப்பாய் வீதி,*
*உடுவில்.*

(9846)

தகவல்:
பிள்ளைகள், தயா, விமா குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் குமாரசாமி

(இளைப்பாறிய அதிபர்)

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் குமாரசாமி அவர்கள் நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற எதிர்நாயகம் (லிகிதர்), அப்புத்துரை (இளைப்பாறிய லிகிதர், சுகாதாரத் திணைக்களம்), திருமதி சிவபாக்கியம், திருமதி உமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மாவின் மாமனாரும் Dr.செல்வநாயகத்தின் சிறிய தந்தையாரும் உமாசங்கரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.எ.செல்வநாயகம் (பெறாமகன்)
அரசினர் வைத்தியசாலை,
சங்கானை.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

(9847)

## தம்பிஐயா யோகராசா

கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா யோகராசா நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் பராசகதியின் அன்புக் கணவரும் ஜெயந்தி,சிவநேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*கோணாவளை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(985?)

தகவல்:-
மனைவி,மகள்.

# போர் வேண்டாம்! அழிவுகள் போதும்!

# உரிமைகளைப் பகிர்ந்துகொண்டு கைகோர்த்து நடப்போம் வாரீர்!

## சிங்களச் சகோதரர்களுக்கு புதுவை அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.24

போர்போதும், அழிவுகள்போதும்! எங்கள் நேசக்கரத்தைப் பற்றுங்கள். எமக்குள்ள உரிமைகளைப் பகிர்ந்து கொண்டு கைகோர்த்து நடப்போம்; சேர்ந்து வாழ்வோம்.

நான்கு நாள்கள் நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' மாநாட்டை முடித்துவைத்து நிறைவுரையாற்றிய புதுவை இரத்தினதுரை சிங்களச் சகோதரர்களைப் பார்த்து இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

நிறைவுரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்திய இராணுவத்தை நாங்கள இங்கிருந்து விரட்டியடித்திருக்காவிட்டாலும் தமிழ்மக்களாகிய நாங்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக இலங்கையிலுள்ள மக்கள் அனைவருமே பெரும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஏற்கனவே, ஸ்ரீலங்கா அரசுடன் போராடிக் களைத்துப்போயிருந்த எமது தலைகளில் மேலும் ஒரு பாரிய பொறுப்பைத் தூக்கிவைத்தது ஸ்ரீலங்கா அரசு. அதனையும் எதிர்கொண்டோம்; தடுத்துநிறுத்தினோம். அவ்வாறு இனியும் எம்மீது பொறுப்புக்கள் சுமத்தப்பட்டால் அவற்றையும் எதிர்கொள்வோம்.

"சிங்களச் சகோதரர்களே! போர் வேண்டாம். இனியும் ஒரு யுத்தம் எமது மண்ணில் வேண்டாம். இழப்புக்கள் போதும்; அழிவுகள் போதும். நாம் நீட்டியுள்ள நேசக்கரத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்குக் கிடைக்கின்ற உரிமைகளையும் உங்களின் சுதந்திரத்தையும் தட்டிப்பறிக்க வரவில்லை. அதேபோல, எமக்கும் சம அளவான உரிமையை வழங்குங்கள். சேர்ந்து வாழ்வோம்; கைகோர்த்து நடப்போம். உங்களுக்குக் கிடைத்த உரிமைகளைவிட கடுகளவுகூட அதிகமாக எங்களுக்கு வேண்டாம். அதேயளவு உரிமைகளைத் தாருங்கள் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம்.

"இந்த இலங்கையைச் சிங்களவர்கள் நேசித்ததைவிட அதிகமாக நேசித்தவர்கள் தமிழர்களே. 'மகாவலிகங்கை நாடெங்கள் நாடே!' 'ஈழமணித்திருநாடெங்கள் நாடே' என்று அன்றே பாடி வைத்தவன் தமிழன். அதற்கு நீங்கள் தந்த பரிசு என்ன?

"இந்தியாவில் இருந்து இங்குவந்த அறிஞர் பெருமக்கள் எவ்வளவோ இடர்கள், தடைகள் மத்தியில் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் என்றைக்குமே நன்றிக்கடன்பட்டவர்கள். எமது தலைமைத்துவத்தை அவர்கள் மனதார ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் நாங்கள் தமிழ்நாட்டில் இருந்தோம். அப்போது அவர்கள் எமக்குச் செய்த உதவிகள் அளப்பரியவை.

"அவர்களுக்கு நாம் மீண்டும் மீண் டும் நன்றி தெரிவிக்கின்றோம்.

"இந்த மானுடத்தின் கூடலைக் கூட்டுமாறு எமக்கு ஆலோசனை வழங்கியவர் தலைவர்தான். இந்த சமாதான சூழலில் எமது பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துக்கூறுங்கள்; தென்னிலங்கை மக்களுக்கு எடுத்து விளக்குங்கள் என்று கூறியவர் தலைவர்தான். இப்பொழுது எமது நோக்கம் நிறைவேறியிருக்கின்றது.

"ஏறக்குறைய இருநூறு போராளிகளின் கடுமையான உழைப்பு வெற்றியளித்திருக்கிறது. இதனைக் குழப்புவதற்கு பல சக்திகள் முயற்சிசெய்தன. அவற்றையெல்லாம் தாண்டி நாம் இந்தப் பாரிய நிகழ்வை நடத்தி முடித்திருக்கிறோம்.

"இது வெறும் சம்பிரதாயம் அல்ல; எமது மன உணர்வு இங்கே வெளிப்பட்டிருக்கிறது. இதில் நாங்கள் ஒரு தமிழ்க் கூடல் பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறோம். அவற்றுக்குச் செயல்



வடிவம் கொடுத்து முன்னெடுத்துச் செல்லவேண்டியது அனைவரதும் பணியாக அமையவேண்டும்.

"இந்த நிகழ்வுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் கலந்துகொண்டவர்களுக்கும் விடுதலைப் புலிகள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"இந்த நிகழ்வுக்கு தமிழீழத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கானோர் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒரு மகிழ்ச்சியான விடயத்தைக் கூறிக்கொள்கின்றேன். 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2003' உங்களின் மாவட்டங்களில் ஒன்றில் தான் நடைபெறும். அப்போது நாம் அங்கு மீண்டும் சந்திப்போம்" - என்றார். (ஐ-4-9)

## பிரபாவுக்கு என்றும் வயது பதினாறுதான்!

*யாழ்ப்பாணம்,ஒக்.24*

*தமிழீழத் தேசியத் தலைவருக்கு வயது என்றும் பதினாறுதான். - இவ்வாறு உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார் புதுவை இரத்தினதுரை.*

*தமிழீழத் தேசியத் தலைவருக்கு வயதுபோய்விட்டது என்று சிலர் பேசிக்கொள்கிறார்களாம் பிரபாகரனுக்கு என்றைக்குமே பதினாறு வயதுதான். முதலாவது தோட்டாவை அடிக்கும்போது பிரபாகரனுக்கு எத்தனை வயதோ அத்தனைவயதுதான் இப்பொழுதும் - என்றார் புதுவை.*

*தனது நிறைவுரையில் அவர் இதனைக் கூறியபோது வீரசிங்கம் மண்டபம் கரகோஷத்தால் அதிர்ந்தது. (ஐ-4)*

## நாடாளுமன்றம் கூட தனியார்மயமாகும்!

### சாடுகிறார் எதிரணி எம்.பி.

"இன்று நடப்பவற்றைப் பார்த்தால் நாடாளுமன்றம் கூட தனியார் மயமாக்கப்பட்டுவிடும்போலிருக்கிறது. 19ஆவது அரசமைப்புத் திருத்தம் அதற்கான ஒரு முயற்சியாகத்தான் தோன்றுகிறது. ஆனால், அதிர்ஷ்டவசமாக அந்தத் திருத்தத்தை உச்ச நீதிமன்றம் தடுத்துநிறுத்திவிட்டது" என்றார் பொது மக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றத்தில் நிதி(திருத்தச்) சட்டமூலம் மற்றும் ஒதுக்கீட்டு(திருத்தச்) சட்டமூலம் ஆகியவற்றின் இரண்டாவது மதிப்பீடு இடம்பெற்றது. அப்போது உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் இணைத்துப் பேசினார். அதேவேளை, அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் சட்ட அறிவையும் சட்டவாதத் திறமைகளையும் விமர்சித்தார்.

நிமல் சிறிபால டி சில்வா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் மீதான சுமையை நாளுக்கு நாள் அதிகரித்திருக்கிறது. இளைஞர் படையணிக்கு நூறுகோடி ரூபாவை ஒதுக்கியது. இன்றுவரை இந்தப் பணத்தினால் என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பது ஒருவருக்கும் தெரியாது.

"நாட்டுக்குள் முதலீட்டாளர்களைக் கொண்டுவருவோம் என்று கூறிக்கொண்டு அமெரிக்காவுக்குச் சென்றவர்கள் தனியாகத்தான் திரும்பிவந்தார்கள். முதலீட்டாளர்கள் எவரேனும் வந்திருந்தால் அதற்கான ஆதாரங்களை இந்தச் சபையில் சமர்ப்பிக்குமாறு சவால் விடுக்கின்றேன்" - என்றார் அவர். (ஒ)

## சாயி சிந்தனை



### அன்பு செலுத்துங்கள்

நீங்கள் தவம் செய்யத் தேவையில்லை. உங்களை வருத்திக்கொள்ளத் தேவையில்லை. அன்பை மிகச் சுலபமாக வளர்த்துக்கொள்ளலாம். அணுவிலிருந்து பேரண்டம் முழுவதும் நிறைந்திருப்பது தெய்வீகம். அந்தத் தெய்வீகம் எதிர்பார்ப்பதெல்லாம் அன்பு மட்டுமே! இந்த அன்பை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும். யாரெல்லாம் எதிர்ப்படுகின்றனரோ அவர்களிடமெல்லாம் அன்பு செலுத்துங்கள். புன்முறுவல் செய்யுங்கள் நீங்கள் நிச்சயம் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். உங்கள் எதிரில் விரோதி இருந்தாலும்கூடப் புன்னகை செய்வதை மறக்காதீர்கள். இன்று மனிதன் புன்னகை செய்வதையே மறந்துவிட்டான். அவன் எதிரியைப் பார்த்துவிட்டால் போதும், முகம் சுருங்கி, முகம் முழுவதும் வரிகள் தெரிகின்றன. இதல்ல நாம் செய்யவேண்டியது உங்களை வெறுப்பவரைக்கூட நீங்கள் விரும்பவேண்டும்! உனக்கு தீங்கிழைப்பவர் எவராயினும் அவரிடமும் நீங்கள் அன்பு செலுத்தவேண்டும். உங்களுக்கு தீங்கிழைப்பவனுக்கு நீங்கள் தீங்கிழைப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல! அவன் செய்த தீமையையும் பொருட்படுத்தாமல், அவனுக்கு நீங்கள் உதவி செய்தீர்களானால் நீங்கள் உண்மையிலேயே திறமைசாலி எனக்கொள்ளலாம். உங்களுக்கு தீங்கிழைப்பவர் அனைவரையுமே நீங்கள் விரும்பத் தொடங்குங்கள். அதில்தான் பெருமையும், உயர்வும் இருக்கிறது. இறைவனின் அருளைப் பெற எல்லோரிடத்தும் அன்பு செலுத்துங்கள்.

*(ஆதாரம்: சனாதன சாரதி 1999 - ஆடி-ப-27)*

## மத்திமாணவர்கள் பகிஷ்கரிப்பு

யாழ்.மத்திய கல்லூரியில் உயர் வகுப்பு மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளுக்கு கணனி வசதி வழங்கவேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை அவர்கள் கல்லூரி உப அதிபரிடம் கையளித்தனர். (ஐ-5-15-86-139)

## புனரமைப்புக் கூட்டம்

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி சங்கத் தானையில் உள்ள சங்க மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து ஏனைய பகுதிகளில் தங்கியுள்ள சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இதில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-117)

## வசாவிளான் பாடசாலைக்கு 6 லட்சம் ரூபா

உருப்பிராயில் இயங்கிவரும் வசாவிளான் மகா வித்தியாலயத்திற்கு வகுப்பறை அமைக்கவென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் 6 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வகுப்பறைகள் பற்றாக்குறையை நிவர்த்திசெய்தும் மலசல கூட வசதியினை ஏற்படுத்தியும் தரும் பொருட்டு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.(ஒ-180)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக 'ஞானச்சுடர்' ஒக்ரோபர் மாத மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் மலரின் வெளியீட்டுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் சி.சிவஞானராசாவும் மதிப்புரையை பிரபல எழுத்தாளர் தெணியானும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-10)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 416 |
| திகதி | 22.10.2002 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 4529752-4542103

வெற்றி இலக்கங்கள் **07 19 44 54**

லக்கினம்

கன்னி



ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டது

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 271,974 | 10 | 2,719,740 |
| 2 இலக்கங்கள் | 24,954 | 20 | 499,080 |
| 1 இல + லக்கினம் | 24,699 | 30 | 740,970 |
| 2 இல + லக்கினம் | 2,306 | 100 | 230,600 |
| 3 இலக்கங்கள் | 683 | 500 | 341,500 |
| 3 இல + லக்கினம் | 50 | 5,000 | 250,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1;000,000 | 1,000,000 |
| மொத்தம் | 324,670 | - | 6,081,890 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,081,890/-

தொடர் இல. 5526168க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2002 ஒக்டோபர் 25ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4530517-0-78
4536093-4-20
4530000-6-10
4540158-7-56
4533348-1-41

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# சி.எம்.ஏ.கற்கைநெறிக்கு சர்வதேச அங்கீகாரம்

அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்கியல்(CMA) என்று அழைக்கப்படும் கற்கைநெறியானது இலங்கையில் 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்கியலின் இலங்கைச் சமூகம் என்ற அமைப்பின் உருவாக்கத்தின்மூலம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. CMA கற்கைநெறியானது முகாமைத்துவ, கணக்கியல் உயர் பாடநெறிகளையும் உயர் நுட்பங்களையும் உள்ளடக்கியதாகவும் அதேநேரம், உலகின் முன்னணி நாடுகளின் முகாமைத்துவ, கணக்கியல் கற்கைநெறிகளைத் தழுவியதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. முக்கியமாக சர்வதேச நிறுவனங்களின் வழிகாட்டலின் அடிப்படையில் CMAயினுடைய பாடநெறிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையில் CMAயின்

## தொழில் வளம்

திட்டத்தினுடைய நிதியீட்டத்தினை கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (CIDA) என்ற கனேடிய நிறுவனம் ஏற்றுள்ளது. CMA கற்கைநெறியின் பாடவடிவமைப்பு, பரீட்சை முறைகள், வினாத்தாள்கள், மேற்பார்வை செய்தல், விடையளிக்கும் முறைமை, பாட கைந்நூல் உருவாக்கம் போன்ற விடயங்கள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகளை CMA கனடா வழங்கிவருகின்றது.

முற்றுமுழுதாக ஆங்கிலமொழியில் பாடவிதானத்தைக் கொண்டுள்ள CMAயினுடைய பாடவிதானம் பிரிட்டனின் CIMAயினுடைய பாடவிதானத்தை உடன் ஒப்பீடு செய்யக்கூடிய விதத்தில் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இன்று வளர்ந்துவரும் முகாமைத்துவத் தேவைக்கு ஏற்பவும் உலகமயமாக்கலுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் CMA அமைக்கப்பெற்றுள்ளது.

பதிவுசெய்யத் தகுதியுடையோர்:

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியும், ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களிலும் ஒன்று அல்லது இரண்டு அமர்வுகளில் திறமைச்சித்தியும் (C) பெற்றிருத்தல்வேண்டும்.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 2 பாடங்களில் சித்தியும் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 5பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருப்பதுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய இருபாடங்களிலும் ஒன்று அல்லது இரண்டு அமர்வுகளில் திறமைச்சித்தி (C) பெற்றிருத்தல்வேண்டும்.

AAT நிலை IIஇல் சித்தியடைந்திருத்தல்.

பட்டதாரிகள், பல்கலைக்கழக, உயர் தொழில்நுட்ப மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடம் மற்றும் கணித பாடத்தில் திறமைச் சித்தி இல்லாதோர் மாற்று நடைமுறையினூடாக CMA கற்கமுடியும்.

இலங்கையில் அரச, பொது, தனியார் நிறுவனங்களிலும் வங்கி, நிதி நிறுவனங்களிலும், வெளிநாட்டு நிறுவனங்களிலும் கணக்கியல் முகாமைத்துவ உயர் பதவிகளுக்கு CMA கற்கைநெறி சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் உலக மயமாக்கலை எதிர்கொள்ளக்கூடிய வகையில CMAசிறப்பாக தொழிற்சந்தையில் தனது காத்திரமான பங்கை வகித்து வருகின்றது.

CMA ஆனது மிகவும் சிறப்பான பாடவிதானத்தைக் கொண்டு சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற ஒரு கற்கைநெறியாகி வளர்ந்துவருகின்றபோதிலும் இதன் பதிவுக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், விதிவிலகுக் கட்டணம் என்பன மிகவும் குறைந்தளவில் இருப்பது மாணவர்களுக்கு மகிழ்ச்சியான விடயமே. CAREER.com

## வவுனியாவில் மாவீரர் தின நிகழ்வு ஏற்பாடு

மாவீரர் தின நிகழ்வுகளை வவுனியாவில் சிறப்பாகக் கொண்டாட விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வவுனியா அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய விசேட கலந்துரையாடல் ஒன்று வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியாவில் செயற்படும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

பிரதான நிகழ்வுகளை வவுனியா ஈச்சன்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடத்துவதென அங்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-3-164)

## ஜி.சீ.ஈ உயர்தர மாணவருக்கு!

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக யாழ். நியூ சயன்ஸ் சென்ரரில் இடம்பெறும் இலவசக் கருத்தரங்கில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு எஸ்.பி.நாகநாதனின் உயிரியல் பாடவிரிவுரை இடம்பெறும்.(ஒ)

## கருத்தரங்கு

சமூகத்தில் சிறந்த ஆளுமையுள்ள தலைவர்களை உருவாக்கும் நோக்குடனும் தற்போது இலங்கையில் மாறிவரும் அரசியல் மாற்றம் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்குமென கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி முதல் தம்புள்ளவில் உள்ள 'கலச்சர் கிளப்' ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

யாழ்மனித நேய அமைப்புகளுடன் 'முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பேர்கொவ் நிறுவனம்' என்னும் வெளிநாட்டு அமைப்பும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்துவது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# சரசாலையில் மக்களை மீளக்குடியமர்த்தும் நிகழ்வு

## இன்று இடம்பெறுகிறது

தென்மராட்சி,ஒக்.24

அமெரிக்க மிதிவெடி, கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி, மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் இதுவரை மிதிவெடி, கண்ணிவெடி அகற்றிய சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு அனுமதியளிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சரசாலையில் இடம்பெறவுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தங்கியுள்ள மூன்று வீடுகள் தவிர்ந்த ஏனையவை பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் - இந்நிகழ்வில் அமெரிக்க கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் - பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

# வெளிநாட்டுப் பெண்மீது 8பேர் பாலியல் வல்லுறவு!

## இரத்தினபுரியில் கொடூரம்

வெளிநாட்டுப் பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய எண்மர் கொண்ட கோஷ்டி ஒன்று பல லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்களையும் அபகரித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் இரத்தினபுரியிலுள்ள உல்லாச விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது. ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த உருகனா பொக்கேன்(வயது43) என்ற பெண் தங்கியிருந்த உல்லாச விடுதியின் அறைக்குள் உட்புகுந்த எட்டு நபர்கள், இந்தப் பெண்ணை மாறிமாறி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகப் பொலீஸில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

மிகவும் பாதிப்புக்குள்ளான இப்பெண், இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உல்லாச விடுதி உரிமையாளர் உட்பட ஊழியர்களைப் பொலீஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளதுடன், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வலை விரிக்கப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

## புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தம்

வன்னிப்பெருநிலப்பரப்பில் பருவ மழை ஆரம்பித்ததை அடுத்து குளங்களைப் புனரமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள குளங்களில மிகவும் மோசமாகச் சேதமடைந்திருந்த 10இற்கும் மேற்பட்ட குளங்கள் நியாப திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்டு வந்தன.

புனரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவேறாத நிலையில் பருவ மழை ஆரம்பமாகியதை அடுத்து புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஒ-3)

# சென்னைக் கார்ப் பந்தயத்தில் விபத்து! மூவர் படுகாயம்; நடிகர் அஜித் தப்பினார்!!

சென்னையில் நடந்த கார்ப் பந்தயம் ஒன்றில் விபத்து ஏற்பட்டது. இதில் மூன்று பேரின் கால்கள் முறிந்தன. இப்போட்டியில் பங்குபற்றிய நடிகர் அஜித்குமார் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

ஜே.கே. ரயர் நிறுவனத்தின் சார்பில் தேசிய கார்ப் பந்தயம் சென்னை இருங்காட்டுக்கோட்டையில் நடந்தது. இந்தப் பந்தயத்துக்கான மூன்றாவது சுற்று மோதல் இதுவாகும்.

வழக்கமான விறுவிறுப்புடன் இந்தப் போட்டி நடந்தது. பிஸமி பிரிவினருக்கான இந்தப் போட்டி விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்தது.

போட்டியில் கலந்துகொண்ட வீரர் அமயாவின் கார் கோளாறு காரணமாகப் பாதிவழியில் நின்றுவிட்டது. இதனால் அவர் தனது காரிலிருந்து இறங்கி பாதையைவிட்டுப் புல்தரை நோக்கி வண்டியைத் தள்ளினார். இவருக்கு உதவியாக அருகில் நின்றுகொண்டிருந்த இரண்டு பேர் வந்தனர். இம்மூவரும் சேர்ந்து பாதுகாப்பாகக்



காரைத் தள்ளிக்கொண்டு இருந்தனர். அப்போது முன்னணி இடத்தைப் பிடிப்பதற்காக ஐந்து கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக வேகமாக வந்து கொண்டிருந்தன. முதலில் வந்த கார் பாதையில நின்றுகொண்டிருந்த அமயாவின் கார் மீது படுவேகமாக மோதியது. இதனால், காரைத் தள்ளிய 3 பேரும் தூக்கி எறியப்பட்டனர்.

இம்மூவரின் கால்களும் முறிந்தன. காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாக முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

காயம் மிகவும் பயங்கரமாக இருந்ததால் 3 பேரும் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப் போட்டியில் திரைப்பட நடிகர் அஜித்குமாரும் கார் ஓட்டினார். விபத்துக்குக் காரணமாக இருந்த காருக்குப் பின்னால்தான் அஜித்குமார் தனது காரை ஓட்டிவந்தார்.

எனினும், அவர் விபத்தைச் சரியான நேரத்தில் கவனித்து தனது வண்டியை ஓரங்கட்டிவிட்டார். பின்னர் தனது வண்டியில் இருந்து இறங்கி காயமடைந்தவர்களுக்கு அஜித் உதவிகள் செய்தார்.

சிறப்பான பயிற்சி எடுத்து இந்தப் போட்டியில் பங்கேற்றுள்ள நடிகர் அஜித்குமார் 10 சுற்றுக்கள் கொண்ட பிஸ்மி ரேஸில் 6ஆவது இடத்தைப் பிடித்தார்.

பெரியளவிலான விபத்து நடந்ததால் இந்தப் பந்தயம் அத்தோடு நிறுத்தப்பட்டது. இந்த விபத்துத் தொடர்பாக அடுத்த விசாரணை நடக்கவுள்ளது. விசாரணை முடிவில் அடுத்த ரேஸ் எப்போது நடக்கும் என்பது குறித்து முடிவு வெளியிடப்படவுள்ளது.

ஜே.கே.டயர் கார்ப் பந்தயத்தில் நடந்த முதல் விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கும்ப்ளேயுடன் மோதல் கங்குலிக்குப் பரிசோதனை

இந்தியா - மேற்கு இந்தியத்தீவு அணிகளுக்கிடையில் சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது கும்ப்ளேயுடன் மோதிய கங்குலிக்குத் தீவிர பரிசோதனை நடைபெறவுள்ளது.

ஞாயிறன்று நடைபெற்ற மேற்கிந்திய அணியின் 2ஆவது இன்னிங்ஸின் கடைசிக் கட்டத்தில் காலின்ஸ் அடித்த பந்தைப் பிடிக்க கங்குலி வேகமாக ஓடினார்.

அப்போது பந்தைப் பார்த்துக் கொண்டு கும்ப்ளேயும் எல்லைக்கோட்டின் அருகிலிருந்து வந்தார். இரு வீரர்களும் வேகமாக வந்ததை ஒருவருக்கொருவர் கவனிக்கவில்லை. இதனால் இருவரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டனர்.

கும்ப்ளேயின் முழங்கை மோதியதில் கங்குலியின் அடிவயிற்றில் பலத்த அடி ஏற்பட்டது.

மைதானத்தில் சுருண்டு விழுந்த கங்குலி வலியால் துடித்தார். உடனடியாக மைதானத்தில் வைத்து மருத்துவர்கள் அவருக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்தனர். இருந்தபோதும அவரால் எழுந்து நடக்கமுடியவில்லை. இதனால் 'ஸ்ரெச்சர்' வரவழைக்கப்பட்டு அவர் மைதானத்தை விட்டு 'பெவிலியனுக்கு' தூக்கிச் செல்லப்பட்டார்.

'பெவிலியனில்' வைத்துத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டதில் கங்குலி லேசாகத் தேறினார். இதன் பின்னர் பயிற்சியாளர் ஜோன் ரைட்டின் வற்புறுத்தலின் பேரில் பரிசளிப்பு விழாவில் கங்குலி கலந்துகொண்டார்.

இருந்தபோதும், அடிவயிற்றில் இன்னும் வலி இருப்பதாக கங்குலி தெரிவித்தார். இதற்காக அவருக்கு தீவிர பரிசோதனை நடக்க உள்ளதாக பயிற்சியாளர் தெரிவித்தார். இதற்காக அவர் குறைந்தபட்சம் 10 நாள்கள் ஓய்வெடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இறுதி டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு நாள்கள் பல இருப்பதால் அதற்குள் கங்குலி குணமாகிவிடுவார் என்றும் பயிற்றுநர் ஜோன் ரைட் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ)

# விளையாட்டு

## உலகக் கிண்ண செஸ்: ஆனந்த் சம்பியன்

உலகக் கிண்ண செஸ்போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சம்பியன் பட்டத்தை வென்றார்.

இப்போட்டிகள் இந்தியாவின் ஹைதராபாத் நகரில் நடந்தன. ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் ஆனந்த், உஸ்பெகிஸ்தானின் ருஸ்தம் கசிட் ஜனோவ் ஆகியோர் மோதினர். இவ்விருவருக்கும் இடையில் 2 இறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது இறுதிப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இரண்டாவது இறுதிப் போட்டியின் 29ஆவது காய் நகர்த்தலில் ருஸ்தமை, ஆனந்த வீழ்த்தினார். இதன்மூலம் 1.5 - 0.5 விகிதத்தில் வெற்றிபெற்று ஆனந்த் சம்பியன் ஆனார்.

33வயதான ஆனந்த், தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் உலகக் கிண்ண செஸ் சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பெண்கள் பிரிவிலும் கடந்த வருட சம்பியனான சீன வீராங்கனை எப யுஹூவா மீண்டும் கிண்ணத்தை வென்றார். (ஐ)

# 'வெட்கக்கேடான தோல்வி இது' மேற்கிந்திய அணித் தலைவர்

"இந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலடைந்த தோல்வி மிகவும் வெட்கக் கேடானது; இத்தவறுக்கு மன்னிப்பே கிடையாது."

- இவ்வாறு மேற்கிந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கார்ல் ஹூப்பர் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 8 விக்கெட்டுக்களால் வென்றது. முதலாவது போட்டியில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 112 ஓட்டங்களால் இந்தியா வெற்றிபெற்றிருந்தது. இருபோட்டிகளும் நான்காவது நாளிலேயே முடிவடைந்தன. இரண்டாவது போட்டியின் பின் ஹூப்பர் கருத்துத் தெரிவிக்கையில்,

"இப்போட்டி நடைபெற்ற ஆடுகளத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை. மோசமான துடுப்பாட்டமும் தொடர்ச்சியாகப் பிடிகளைத் தவறவிட்டமையுமே தோல்விக்குக் காரணம். இது மிகவும் வருத்தமளிக்கிறது; இத்தவறுக்கு மன்னிப்பு கிடையாது.

"எனினும், இன்னும் ஒரு டெஸ்ட் போட்டி எஞ்சியுள்ளமை ஆறுதல் அளிக்கிறது. நாங்கள் மீண்டும் எழுவதற்கான போட்டியாக இதைக் கருதுவோம்" என்றார்.

கார்ல் ஹூப்பர் இதுவரை 24 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார். இவற்றில் 11 போட்டிகளில் மேற்கிந்திய அணி தோல்வியுற்றுள்ளது. 4 போட்டிகளில் அவ்வணி வெற்றிபெற்றுள்ளது. (ஐ)

# வெற்றிக்கு அனைவரும் உதவினர் - கங்குலி

இந்தியாவின் வெற்றிக்கு அணி வீரர்கள் அனைவருமே உதவினர் என சௌரவ் கங்குலி கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:-

"சுழற்பந்து வீச்சாளர்களே இம் மைதானத்தில் சிறப்பாக விளையாடுவர் என எதிர்பார்த்தோம். ஆனால், வேகப்பந்து வீச்சாளர்களான ஸ்ரீநாத், ஸஹீர்கான் ஆகியோரும் சிறப்பாகப் பந்து வீசினர். உலகக் கிண்ணப் போட்டி வரை இதே வெற்றியைத் தொடர்வது முக்கியம்" என்றார்.

முதல் இன்னிங்ஸ்ஸில் தனக்கு சர்ச்சைக்குரிய விதமாக அவுட் கொடுக்கப்பட்டமை பற்றி கங்குலி கருத்துத் தெரிவிக்கையில், "சில சமயங்களில இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வதுண்டு. மிகப் பெரிய ரசிகர் கூட்டத்துக்கு மத்தியிலும் ஆரவாரத்துக்கு மத்தியிலும் நடுவர்கள் எப்போதும் சரியாக இருந்துவிடமுடியாது" என்றார். (ஐ)

### வடக்கில் பருவமழை தொடங்கிவிட்டதால்

# மீனவர் இரவில் கரைதிரும்ப அனுமதிக்கப்பட வேண்டும்!

## கஜேந்திரகுமார் எம்.பி. அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.24

வடக்கில் பருவமழை தொடங்கி விட்டது. தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் இனி இரவில் கடலில் தங்கி விடிந்ததும் திரும்புவது பாது காப்பானது அல்ல. எனவே மீனவர் கள் இரவிலேயே கரைதிரும்பிவிட அனுமதிக்கப்படவேண்டும்.

தமிழர் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் ஜீ.ஜீ.கஜேந்திர குமார் இவ்வாறு அரசிடம் கோரியி ருக்கிறார்.

குடாநாட்டு மீனவர்கள் மாலை யில் தொழிலுக்குச் சென்று மறுநாள் விடிந்த பின்னரே கரைதிரும்ப வேண் டும் என்ற கட்டாயம் தற்போது உள் ளது. பருவமழை காலத்தில் இது சாத்தியமில்லை. கொந்தளிப்பு மிகுந்த கடலில் தங்குவது பெரும் உயிராபத்தானது. எனவே தற்போதுள்ள நடைமுறை நீக்கப்பட்டு மீனவர்கள் இரவிலேயே கரை திரும்பிவிட அனு மதிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு கஜேந்திரகுமார் எம்.பி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப் பனவிடம் கேட்டிருக்கிறார்.

மீனவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த நடை முறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்திருக் கிறார். (ஐ)

### ஏற்கனவே...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து, தமது இராணுவப் பொறுப்பா ளர் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தில் அவரது 31ஆவது நாளில், அந்தி யேட்டி தினத்தில் போட்டதாகக் கூறப் பட்டது.

இளைஞனின் தலை வெட்டி வீசப் பட்ட இந்தச் சம்பவம் அப்போது குடாநாட்டில் பெரும் பரபரப்பையும் பீதியையும் கிளப்பியிருந்தது என் பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்க னவே கைதுசெய்யப்பட்ட புளொட் உறுப்பினர்கள் இருவர் வழங்கிய தக வலின் பேரில் மேலும் இரு புளொட் உறுப்பினர்களை கைதுசெய்யுமாறு பருத்தித்துறை நீதிமன்றம் யாழ். தலைமையக பொலீஸ் பொறுப்பதிகா ரிக்கு அச்சமயம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், குறிப்பிட்ட அந்த உறுப்பி னர்கள் இருவரும் நெல்லியடிப் பொலீஸ் நிலைய எல்லைப் பரப்புக் குள் இருக்கவில்லை என்றும் யாழ்ப் பாணத்தில் உள்ள புளொட் தலை மையகத்தில்தான் தங்கியிருக்கின் றனர் என்றும் பொலீஸார் அப்போது நதிவானின் கவனத்துக்கு கொண்டுவந் ததை அடுத்து 99ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றம் அந்த இரு உறுப்பினர்க ளுக்கும் எதிராகப் பிடியாணை பிறப் பித்திருந்தது.

'மானுடத்தின் தமிழ்க்கூடல்' மாநாடு நடைபெற்ற வீரசிங்கம் மண்டபத்தினுள் துப்பாக்கியுடன் நுழைய முயன்றவேளை பிடிக்கப்பட்ட புளொட் உறுப்பினர் ஜெயச்சந்திரன் (ஜெயாமாஸ்டர்) அவர்களில் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வீரசிங்கம் மண்டபத்தினுள் துப் பாக்கியுடன் நுழைய முற்பட்டது தொடர்பாக நேற்று இவர் யாழ்.நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவருக்கு எதிராக பருத்தித்துறை நதிமன்றம் விடுத்திருந்த பிடியாணை தொடர்பான அறிக்கையை நெல்லி யடிப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆரியரட்ண என்பவர் யாழ்.நீதிவானி டம் சமர்ப்பித்தார். அதனையடுத்து குறிப்பிட்ட நபரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யு மாறு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பணித்தார்.

(ஐ-4)

**SALES SALES SALES.....**

**தீபாவளியை முன்னிட்டு லைடனில் மகத்தான மலிவு விற்பனை**

15.10.2002 செவ்வாய் முதல் — 04.11.2002 திங்கள்வரை

லைடனில் சகல பொருள்களையும் விசேடவிலைக் கழிவுடன் வழங்கு கின்றோம் என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக் கின்றோம்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.:2222381 (C-24267)

விஜயம் செய்யுங்கள் தீபாவளி விலைக்கழிவை அனுபவித்துவிடுங்கள்.

**வெளிவந்துவிட்டது**

**ஏகலைவன்**

இரு திங்கள் இதழ் - கணை - 2

சமூக - கலை - இலக்கிய கல்வி அறிவியல் ஏடு (9853)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை முத்தையா

சாத்தாகலட்டி, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மங்குனியன் வளவு, அளவெட்டியை வசிப்பிடமாகவும்கொண்ட க.முத்தையா அவர்கள் நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் மற்றும் சேனாதிராஜா, அமரர் நடராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் சர வண முத்து, தங்கம் ஆகியோரின் சகோதரனும் ஞானசக்தியின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை மதியம் 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மங்குனியன் வளவு,*
*அளவெட்டி மத்தி,*
*அளவெட்டி.* (9858)

தகவல்: மு.சேனாதிராஜா (மகன்).

### இளையதம்பி சரவணமுத்து

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சரவணமுத்து நேற்று (23.10.2002) புதன்கிழமை கால மானார்.

அன்னார் தங்கச்சிபிள்ளையின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, நந்தகுமார், கலாவாணி, ஜீவகுமார், விஜயகுமார் (M.P.C.S., நீர்வேலி) இளையகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவேந்திரன் (சுகாதாரத் திணைக்களம்,யாழ்ப்பாணம்), அமிர்தலிங்கம், ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனனி, ஜனகன், ஜெயந்தன், ஜெயரூபன், கஜரூபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு.* (C-24399)

தகவல்: குடும்பத்தினர்.

### செல்லப்பா அம்பலவாணர்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட செல்லப்பா அம்பலவாணர் நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - ஆச்சிப்பிள்ளை தம்பதி களின் மூத்த மகனும் இராசம்மாவின் (நல்லம்மா) அன்புக் கணவரும் ராஜேஸ்வரன் (சுவிஸ்), விஜயகுமாரி, ஜெயக்குமாரி (கனடா), இரத்தின சிங்கம் (ஜேர்மனி), கோபிநாத் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம், இராசமணி, அருளையா, குணசிங்கம், தனபாலசிங்கம், காலஞ் சென்ற சின்னம்மா ஆகியோரின் சகோதரனும் மூர்த்தி, கலைச்செல்வி ஆகியோரின் மாமனாரும் இராமலிங்கம், காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் அருணா, மயூரா, சுபீனா, கலேஸ், கீர்த்தன் ஆகி யோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தா கலட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மேற்கு,*
*சிறுப்பிட்டி.* (C-24400)

தகவல்: விஜயகுமாரி (விஜயா) (மகள்)

**வேலையாள் தேவை**

தையல் வேலையில் அனுபவம் உள்ள ஆணகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**குமார் தையலகம்**
தாவடி - கொக்குவில
T.P. -077-111486 (9854)

**ராஜா** யாழ்ப்பாணம்.
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
**யூத்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு. நே)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சூர்யா, ஸ்ருதிகா, விஜயகுமார் நடித்த
**ஸ்ரீ**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 4.00 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்கு
KILLER BABE FOR THE C.I.A.

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார், ரோஜா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
**சின்னத்துரை**
(ரீல்ஸ்)
காட்சிகள் தினசரி : 11.30, 3.00 (பு.நே.)

### காணவில்லை

150 - 135 என்னும் இலக்கம் கொண்ட (செசி நம்பர் 50 - 7355084, எஞ் சின் நம்பர் 50 - 7355084) நீல நிற நியூஸ் மேற் (ஜமகா) மோட்டார் சைக் கிள் நேற்று (23.10.2002) புதன்கிழமை இரவு 8.30 முதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

S.S.தங்கராஜா, மருதமகால்
இணுவில் வீதி, மானிப்பாய்.
T.P : 021-222-3197
(C-24400)

### வைத்திலிங்கச் செட்டியார் கந்தப்பச் செட்டியார் பரம்பரை உரிமையாளர், தர்மகர்த்தாவும் முகாமையாளரும்

### வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்

(வண்ணை சிவன் கோயில்)

வண்ணை சிவன் கோயிலின் பரம்பரை உரிமையாளர், தர்ம கர்த்தாவும், முகாமையாளருமான உயர்திரு.வை.கந்தப்பச்செட்டி யார் அவர்களின் இறுதிக்கிரியைகள் 23.10.2002 நேற்றையதினம் சென்னை, இந்தியாவில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**46B VGP**
*ஸ்ரீனிவாசநகர்,*
*ராஜ கீழ்ப்பாக்கம் றோட், கிழக்கு தாம்பரம்*
*செல்லையர் போஸ்ட், சென்னை - 73,*
*இந்தியா.* (C-24396)

தகவல்: க.வைத்திலிங்கம் (மகன்)
*54 (106) மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை பினாகபாணி

(ஓய்வு பெற்ற அதிபர், யா/வண். வைத்திலிங்க வித்தியாலயம்)

யாழ்ப்பாணம், கலட்டியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை பினாகபாணி நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சிவபாக்கியம் தம்பதி களின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நீலாயதாட்சி (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)யின் அன்புக் கணவரும் மங்கையர்க் கரசி, தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் வள்ளிநாயகி, வாலாம்பிகை மற்றும் காலஞ்சென்ற வர்களான வைத்தீஸ்வரன், சர்வலோகநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அரியகுமார், அசோக்குமார், காலஞ்சென்ற வசந்தமாலா மற்றும் அசோகமலர் வசந்தகுமாரி, முரளீதரன், சிறீதரன், பாலராஜன், மஞ்சுளா, கௌசல்யா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஜெயானந்தன், ஜெயமணி, மதிவதனசோதி, சுரேஸ்குமார், பகீரதி, கணேசராசா, ரேணுகா, காண்டீபன், ஸ்ரீபவானி, சேய்மணி, ராஜ்குமார், ராஜராயன், குகேந்திரன், பூங்கோதை, வருணா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை,*
*வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.* (9850)

தகவல்: நீ.பினாகபாணி (மனைவி).

### திருமதி நல்லசேகரம்பிள்ளை தங்கம்

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட நல்லசேகரம்பிள்ளை தங்கம் நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (முன்னாள் முகாமையாளர், சாந்தி அச்சகம் ஓதுபவர்), கஜமுகன் (ஓய்வுபெற்ற சீநோர் திட்ட ஊழியர்), காலஞ்சென்ற கார்த்திகேயன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாம்பிகை, சரஸ்வதி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை, காரைநகர்) ஆகியோரின் மாமியாரும் வேல்வேந்தன் (பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், இறுதி வருட மாணவன்), வாசுகி (கலைப்பீடம், மூன்றாம் வருடம் இந்து நாகரிகத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை மாலை 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோங்கலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.* (9850)

தகவல்: பாலசுப்பிரமணியம் (கணேஸ்), கஜமுகன் (பிள்ளைகள்)

### திருமதி சபாரத்தினம் இலட்சுமி அம்மா

கருங்காலி-காரைநகரை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சபாரத் தினம் இலட்சுமி அம்மா நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினத்தின் (முன்னாள் உரிமையாளர், கா.பொ.பிறதேஸ் பதுளை, தர்மகர்த்தா கருங்காலி முருகன் கோயில்) பாசமிகு மனைவியும் செந்தில்நாதனின் அன்புத்தாயாரும் தேவமலர் (சமுர்த்தி அலுவலர், காரை. தென்மேற்கு பிரதேச செயலகம், ஊர்கா வற்றுறை) இன் பாசமிகு மாமியாரும் பிரசாந்தன், கஜரூபன் ஆகியோரின் பாசமிகு அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் கருங்காலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கருங்காலி,*
*காரைநகர்.* (C/24397)

தகவல்: ச.செந்தில்நாதன (மகன்)

### சதாசிவம் கந்தசாமி

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாதசிவம் கந்தசாமி நேற்று (23.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கம்மா தம்பதி களின் அருமை மகனும் செல்லநாயகியின் பாசமிகு கணவரும் திரு மேஸ்வரி, பரமசாமி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஆறு முகம் தம்பதிகளின் மருமகனும் நடராசா, காலஞ்சென்ற சண்முகம் மற்றும் தருமலிங்கம், கந்தசாமி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை,*
*களபூமி, காரைநகர்.* (9857)

தகவல்: ச.பரமசாமி (சகோதரன்)

# அன்றைய தமிழாராய்ச்சி மாநாடும் 'மானுடத்தின் தமிழ்க் கூடலும்'

## வீரசிங்கம் மண்டப நிகழ்வுகளை ஒப்பிடுகிறார் அமைச்சர் அஸ்வர்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடைசியாக நடைபெற்ற சர்வதேச தமிழாராட்சி மாநாடு உயிர்களை பலிகொண்ட மாநாடாகவே முடிந்தது. ஆனால், இன்று அந்த நிலை இல்லை.

"யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். அதேபோன்று கொழும்பில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழாவையும் கொண்டாடுகிறோம்.

"இது மறைந்த தலைவர் கந்தையா நவரத்தினம் அவர்களின் கனவுகளில் ஒன்று. இன்று அவர் உயிரோடு இருந்திருந்தால் பெரும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்."

நாடாளுமன்ற விவகார அமைச்சர் அஸ்வர் நாடாளுமன்றத்தில் இவ்வாறு அனுதாப அஞ்சலி செலுத்தினார்.

நேற்று நாடாளுமன்றில் காலஞ்சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் கந்தையா நவரத்தினத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து பேசும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அமைச்சர் அஸ்வர் மேலும் கூறியதாவது

அமரர் நவரத்தினம் ஒரு முற்போக்கு சீர்திருத்த அரசியல்வாதி தமிழ், முஸ்லிம், பௌத்த இனங்கள் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் வாழவேண்டும் என்ற தீவிர நோக்கம் கொண்டவர்.

பலம்மிக்க கம்யூனிஸ வாதியாக இருந்தபோதும், ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் வந்தவர்.

அன்று அவர் நாடாளுமன்றத்தில் வந்தபோது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு சென்றுவருவதே ஒரு சிரமமான காரியமாக இருந்தது. பல சிரமங்களுக்கு மத்தியில் தனது தொகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்தவர்.

சகல இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தவர். சமாதானம் நிலைக்க வேண்டும் என வற்புறுத்தியவர்.

அன்றைய சூழ்நிலையிலும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அனைத்துலக தமிழாராட்சி மாநாட்டை வெகு விமரிசையாக நடத்தினார்கள் ஆனால், ஒரு சில விஷமிகளால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையால் பல உயிர்கள் பலியாகின. அமைதி சீர்குலைக்கப்பட்டது. இவ்வேளையில் அமரர் கந்தையா நவரத்தினம் பெரிதும் வேதனையடைந்தார்.

ஆனால், 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் நிலைமை சீரடைந்து அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழ ஆரம்பித்து விட்டனர். அமைதியும் சமாதானமும் நிலவுகின்றது. இது நிரந்தரமாக அமைய நாம் சிரத்தையுடன் செயற்படவேண்டும். அப்போதுதான் அன்னாரின் ஆத்மா சாந்தியடையும் என்று அமைச்சர் அஸ்வர் குறிப்பிட்டார். (ம-12)

### கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை ஒத்திவைப்பு நேர விவாதம் நடத்த ஜே.வி.பி. பிரேரணை சமர்ப்பித்திருந்தது.

இப்பிரேரணை மீதான விவாதத்தில் தாங்களும் பங்குபற்ற எதிர்கட்சி சார்பில் நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென இரா.சம்பந்தன் எம்.பி. கோரினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு இவ்விவாதத்துக்காக அரசாங்கத்தின் தரப்பில் நேரம் ஒதுக்க அரசாங்கக் கட்சியினர் முன்வந்தனர். ஆனால், கூட்டமைப்பினர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்விவாதத்தில் பங்குபற்றாமல் கூட்டமைப்பு எம்.பிக்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.(ம)

### மிதிவெடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனை நிலையத்துக்கு அருகில் உள்ள கைவிடப்பட்ட வளவினுள் விளாம்பழம் பொறுக்கச் சென்றசமயம் விளாமரத்தின் அடியில் புதையுண்டிருந்த மிதிவெடி வெடித்ததாகக் கூறப்பட்டது.

உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுவனது இரு கால்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டதுடன், உடலின் பல இடங்களிலும் சிறு காயங்களும் ஏற்பட்டுள்ளன.(எ-12-36)

### யாழ்.மீனவர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுடன் கூடிய மழை பெய்யும் காலத்தில் இடையில் தமது தொழிலை முடித்துக் கொண்டவர்கள் கரைக்குத் திரும்புவதற்காக விடியும் வரை பல மணிநேரம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஆழ்கடலில் காத்திருக்கவேண்டியுள்ளது.

படையினரின் இந்தக் கெடுபிடிக் கட்டுப்பாட்டால் குடாநாட்டு மீனவர்கள் படும் அவலத்தை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று நாடாளுமன்றக் கூட்டத்தில் அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்து எடுத்துரைத்தார்.

அதை அடுத்து இரவிலும் மீனவர்கள் கரைக்குத் திரும்புவதை அனுமதிக்கும் படி சம்பந்தப்பட்ட படையினருக்கு அரசிடமிருந்து உத்தரவு பறந்திருக்கிறது.

உடனடியாகச் செயற்பாட்டுக்கு வரும் வகையில் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பணிப்புரைப்படி செயற்பட படையினர் மறுத்தால் அது குறித்து தங்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கும் படியும், அப்படித் தெரிவித்தால் மேல் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும் என்று கஜேந்திரகுமார் எம்.பி. யாழ்.மீனவர்களுக்கு தெரிவித்திருக்கின்றார். (ம)

## உதைபந்தாட்ட போட்டிகள்

தென்மராட்சி பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்துக்கான போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிமுதல் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

14 வயதுப்பிரிவு:- சாவகச்சேரி இந்து எதிர் மீசாலை வீரசிங்கம் ம.வி.

16 வயதுப்பிரிவு:- நாவற்குழி ம.வி. எதிர் கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

18 வயதுப்பிரிவு:- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. எதிர் மீசாலை விக்னேஸ்வர ம.வி. (எ)

## பல்கலைக்கழக மாணவி விபத்தில் படுகாயம்

கொக்குவில்,ஒக்.24

திருநெல்வேலி சிவன் கோயிலடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற கார் - சைக்கிள் விபத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவி ஒருவர் படுகாயம் அடைந்தார்.

கலைப்பீட மூன்றாம் வருட மாணவியான கிளிநொச்சியைச் சேர்ந்த யூடிட் மெரினா என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-69)

### அடுத்த சுற்றுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படவிருக்கும் கூட்டுக்குழு-

மாத இறுதியில் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் அடுத்தசுற்றுப் பேச்சுக்கான ஏற்பாடுகள், நிகழ்ச்சி நிரல்கள் -

வடக்கு - கிழக்கின் குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் - பாதுகாப்பு நிலைவரங்கள் -

ஆகியன குறித்து நேற்றைய பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் பங்குபற்றும் புலிகளின் பிரதிநிதிகள் குழுவில் சு.ப.தமிழ்ச்செல்வனும், கேணல் கருணாவும் இடம்பெறுவர் என்ற தகவலும் நோர்வேத் தரப்புக்கு எடுத்துரைக்கப்பட்டது.

கடந்த தடவை பேச்சுக்களில் பங்குபற்றிய ஜோய் மகேஸ்வரனும், வி.உருத்திரகுமாரும் இம்முறையும் பேச்சுக்களின்போது புலிகள் தரப்பின் மூலவள ஆலோசகர்களாகப் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

### இரண்டாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் ஒதுக்குப்புறமான நகரம் இம்முறை பேச்சுக்கு தெரிவுசெய்யப்படலாம் எனத் தெரிகின்றது.

நேற்று கிளிநொச்சியில் உள்ள புலிகளின் தலைவர்களைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இன்று கொழும்பிலிருந்து அமெரிக்கா புறப்பட்டுச் செல்கின்றார்.

அதேசமயம், அந்நாட்டு வெளிவிவகார ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், அடுத்த சுற்றுப் பேச்சுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இன்று கொழும்பிலிருந்து தாய்லாந்து புறப்படுகின்றார்,

தற்போது வன்னியில் தங்கியிருக்கும் அன்ரன் பாலசிங்கம் மற்றும் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகியோர் தாய்லாந்துப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக கொழும்பு ஊடாக பாங்கொக்கிற்குச் செல்வார்கள் எனத் தெரியவருகின்றது.

இரண்டாவது சுற்றுப் பேச்சு எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. அதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் அவர்கள் வன்னியிலிருந்து ஹெலி மூலம் கட்டுநாயக்கா வந்து அங்கிருந்து பாங்கொக் செல்லக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

### பேச்சுக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிஸ்வி சின்னலெப்பை தொடர்பான அனுதாபப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அதில் உரையாற்றும்போதே ஹிஸ் புல்லாஹ் எம்.பி. இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க நல்ல ஒரு சூழ்நிலையும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில், மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் கொண்டிருந்த தலைமைத்துவக் கொள்கைகளை இன்றைய தலைமைத்துவம் பின்பற்ற வேண்டும். பிரச்சினைகளை அந்த வகையில் அணுகவேண்டும். இதனையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றார். (ம)

SALE SALE SALE.....
RAM CD WORLD இன்
தீபாவளி மலிவு விற்பனை
மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பக்திப் பாடல்கள், பழைய, புதிய திரைப்படப் பாடல்கள் அடங்கிய ஓடியோ CDகளையும் வீடியோ CD களையும் இன்று 24.10.2002 முதல் 04.11.2002 தீபாவளி வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடியோ CD கள் - 100, 125, 150
வீடியோ (பாடல்) CDகள் - 150, 175
வீடியோ (திரைப்படம்)CDகள் - 250, 275
ராம் CD வேல்ட்
220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (9802)

ஓரிரு தினங்களில்.....
காணி நிர்வாகப் போதனாசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்
வெளியீடு:-
C.G.T (9856)

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்.நகர்
A/L 2004
Inorganic & General Chemistry
மீட்டலுடன்
sat., sun. 7-8 a.m.
ஆரம்பம்: 26.10.02
By: அன்பழகன்
Biology
ஆரம்பம்: 26.10.02
sat., sun. 8-9 a.m.
By : தற்பரன்

சௌண்டிப் எக்ஸ்பிரஸ் விமான சேவை

மேகங்களுக்குள்ளே சௌகரியமாகவும் வசதியாகவும்
ஒரு மணித்தியாலத்தில்
யாழ்ப்பாணம் - கொழும்பு
ஒரு வழிப்பயணத்துக்கு 2,425/=
எம்மிடம் பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்ரீத்தி வீடியோ
யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P.: 021 - 2222884 (C/24394)

இதய அஞ்சலிகள்
இந்தியாவில் காலமாகிய வன்னை வைத்தீஸ்வரன் கோயில் பரம்பரை உரிமையாளரும், தர்மகர்த்தாவும் முகாமையாளருமாகிய
வைத்திலிங்கச் செட்டியார்
கந்தப்பச் செட்டியார்
அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகள்!
அன்னாரது மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தினரின் துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம்.
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-24401)
ஊழியர்கள், உதயன் நிறுவனம்.

SERENDIB சிறந்த சேவையின் சின்னம் SERENDIB
விமான சேவை
கட்டணத்தை சிந்தியுங்கள்....!
இலவச பஸ் சேவை விமான நிலையம் வரை
இரத்மலானை - வெள்ளவத்தை வரை
யாழ்.நகர் - பலாலி வரை
3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பயணச்சீட்டு இலவசம்!
(C/24392)
SERENDIB - MANO
13,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777 - 801038, 021 - 2222007, 0777-512648,
SERENDIB EXP
500, காலி வீதி, வெள்ளவத்தை
505632, 500626
மனோஜ்
67/A, WOLFENDALL STREET, COLOMBO - 13
074-612656, 01-390128, 0777-517019

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.10.2002இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.